876

தொகுதி 5.] 1927ஸ் ஜனவரிமீ 1உ [பகுதி 12.

OFFICE OF THE ... 14 FEB 1927 ... MADRAS

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று கற்பகச்சோலையின் அற்புதக் கோலை என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான நான்கு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமன்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. பழைய சந்தாதாரர்கள் அடுத்த வருஷத்திற்கு பணம் கட்டி விட்டால் அவர்களுக்கு இப்போது தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவல் கிடைப்பதோடு அதன்பின் அடுத்த வருஷத்தில் தொடங்கப்படும் நாவலும் கிடைக்கும். அடுத்த வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு இந்த மாதத்தில் தொடஙகப்பட்டிருக்கும் "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காதாதலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணு சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாராசச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலயம்" தபால் பெட்டி, நெ. 167 மதராஸ்.

14 FEB 1927

# கற்பகச்சோலையின் அற்புதக் கொலை.

## 1-வது அத்தியாயம்.

ஓங்குபுகழ் கொண்டு தண் கடலை யாடையாக வுடைய இப்பூவுலகின் இயற்கைக் காட்சிகளில், பளபளப் பான பச்சை மயிலின்மேல் சிவந்த நிறமுடைய வேலாயுதக் கடவுள் எழுந்தருள்வது போன்று அகன்ற கடலினின்றும் கீழ்த்திசையில் ஆதித்தன் தன் சிவந்த கிரணங்களோடு மேலெழும் காட்சி உண்மையில் ஓர் அற்புதக்காட்சியே. அவ் வாறே மாலைப்போது பகலவன் மேற்குக்கடலில் மறையுந் தருணம் உருக்கிவிட்ட செம்பு போன்ற சிவந்த பிரகாசம் பொருந்திய வானத்தின் காட்சியும் மிக்க அற்புதமானதே. இந்த இரண்டு காட்சிகளும், தினந்தோறும் ஒருவன் கண்டு களித்துக்கொண்டே யிருந்தாலும் வெறுக்காத காட்சிகள். எத்தனையோ புலவர்கள் இக்காட்சிகளைத் தங்கள் இனிய மொழிகளால் புகழ்ந்திருக்கிறார்கள். எத்தனை சித்திரக் காரர் இக்காட்சிகளைச் சித்திரங்களில் தீட்டி யாவரும் கண்டு மகிழச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவற்றிற்கு முடிவே யில்லை.

உலகில் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் செல் வத்திலும் உயர்ந்ததும், எங்கும் பல அடுக்கு மாளிகை களும், கோபுரங்களும், மண்டபங்களும் உத்தியான வனங்

களும் நிறைந்ததுமாகிய இந்திரபுரியில் ஒரு நாள் மாலைப் போது ஆதித்தன் மேற்குக்கடலில் மறையும் சமையம் வானம் சிவந்த கிரணங்களால் மேற்குக் கோடியில் ஜொலித்துக்கொண்டிருக்கிறது. ஆச்சு இன்னும் சில நிமிடங்களில் எல்லா ஒளியும் மறைந்துபோய் இராக்காலம் தன் ஆட்சியைச் செலுத்த வரப்போகிறது. காலை முதல் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டிருந்த ஜனங்கள் வேலையை விட்டுச் சந்தோஷத்தோடு இளைப்பாற ஆவலோடு தத்தம் மனைகளுக்குச் சென்றுகொண் டிருக்கிறார்கள். மூதாதைகள் தேடிவைத்த அரும்பொருளைக் கேளிக்கையிலும் சிற்றின்பத்திலும் சூதிலும் செலவழிக்கும் வாலிபர்கள் இரவு நெருங்குவதைக் கண்டு சந்தோஷத்தோடு நல்ல ஆடையாபரணங்களை யுடுத்திக்கொண்டு கிடைத்த பணத்தை யெடுத்துக்கொண்டு, சூதாடு மரங்கங்களுக்கும், விலை மாதர் வீடுகளுக்கும், மதுபானக் கடைகள் உள்ள ஹோட்டல்களுக்கும் தனியாகவும் தோழர்களோடும் புறப்படுகிறார்கள்.

அச்சமயம் இந்திரபுரியின் அகன்ற ஒரு வீதியில் இரண்டடுக்கு மாடி வீட்டில் ஒரு யௌவன புருடன் ஒரு அறையில் உட்கார்ந்து ஒரு கதைப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறான். திடீலென்று அந்த அறையிலுள்ள டெலிபோன் மணி, கண கண வென்று சப்தித்தது. அம் மனிதன் சட்டென்றெழுந்து போய் 'யார்?' என்று கேட்டான்.

"தாங்கள் அச்சுதம் பிள்ளையா?" என்ற பதில் கேள்வி வந்தது. அதற்கு அவன், "ஆம். நீ அம்புஜம் அல்லவா? என்ன சங்கதி?" என்றான்.

அதற்கு, "ஆம்; என் சிறிய தந்தை இரத்னசாமிபிள்ளை இங்கோமாயும் வீடுவந்து சேரவில்லை" என்று பதில் வந்தது.

அச்சுதம் பிள்ளை:—அவர் இன்னும் வராவிட்டால் சீக்கிரத்தில் வருவார். நான் அவரைக் காணவேண்டிய வேலையிருக்கிறது. இராத்திரிக்கு வரலாமென்றிருக்கிறேன்.

அம்புஜம்:—ஆனால் இப்போதே வாரும். இங்கேயே போஜனத்திற்கு வந்துவிடும். அவர் வராமலிருப்பது எனக்கு மிக்க மனக்கலக்கமாக விருக்கிறது.

அச்சுதம்பிள்ளை தம் காதலிக்குத் தேறுதலாக "என் அம்புஜம்! வீண் கலக்கம் வேண்டாம்; அவருக்கொன்றுமிராது; க்ஷேமமாகவே வந்து சேர்வார்" என்றார்.

அம்புஜம் மிக்க கலக்கத்தோடு, "இல்லை. அவர் க்ஷேமமா யில்லை. அவருக்கேதோ ஆபத்து நேர்ந்துவிட்டதென்று என் மனதிற்றோற்றுகின்றது. இது வரையில் அவர் ஒருபோதும் இவ்வளவு நேரம் வராமலிருந்ததில்லை. அப்படி நேர்வதாயின் தாம் செல்லுமிடத்தை யெங்களுக்கறிவித்திருப்பார். தயவு செய்து உடனே புறப்பட்டு வாரும். வருகிறீரல்லவா?" என்றாள்.

அச்சு:—ஆகா; அவசியம் வருகிறேன். வருவதற்கு மிக்க சந்தோஷமே. ஆனால் நீ பீதியடைவது வீண் என்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன். எல்லம்மாள் எப்படியிருக்கிறாள். அந்த அம்மாள்கூட கலவரமடைகிறாளோ?

அம்பு:—இல்லை யில்லை; நான் கலக்கமடைவதைக் கண்டு அந்த அம்மாள் நகைக்கிறார்கள்.

18651

அச்சு:—அப்படியாயின் நீ வீணாய்க் கலவரப்படவேண்டாம்; உண்மையில் அந்த அம்மாளுக்கு—.

அம்பு:—"நீர் கூறப்போவது எனக்குத் தெரியும். அந்தம்மாளுக்கு அவரிடம் எனக்கிருப்பதிலும் மேலான விசுவாசமில்லை. அவசியம் உடனே வாருங்கள்" என்று கூறினாள்.

இரத்தினசாமிப் பிள்ளையின் வீட்டில் எல்லம்மாள் என்பவள் வேலைக்காரியாக விருந்தாள். இரத்தினசாமிப்பிள்ளை அவளை மணம்புரிய விரும்பினர். அம்புஜத்திற்கு அவர் மணம் செய்து கொண்டால் செய்து கொள்ளட்டும் என்றே எண்ணம். ஆனல் குடும்பத்தில் தன் அதிகாரம் முதன்மையாயிருப்பதற்கு இடையூறு வருவதாயின் அவளுக்கு வெறுப்பே. எல்லம்மாள் ஒரு கைம்பெண். அவள் முன்னமே தன் அதிகாரத்தைக்காட்டத் தொடங்கி விட்டாள். அவள் தன் சிறிய தந்தையை மணம்புரியப்போவதால் நாம் அவளுக்கு இடந்தரவேண்டியது நியாயமேயென்று அம்புஜம் கருதினள். ஆயினும் அவள் பெருமை புண்பட்டு விட்டது.

அம்புஜம் எல்லம்மாளை நோக்கி, "நான் அச்சுதம் பிள்ளையை இங்கே போஜனத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டேன்" என்று கூறிவிட்டுத் தன் சிற்றப்பன் வருகிறாராவென்று பார்க்கச் சாளரத்தருகில் சென்றாள். எல்லம்மாள் அச்சமயம் மாலை வெளியான தினசரிப்பத்திரிகையை வாசித்துக்கொண் டிருந்தாள். ஆதலால், அதைவிட்டுத் தலை நிமிர்ந்து, "சரிதான்" என்றாள்.

(மேல் நாட்டாரின் வெளிவேடத்தைப் பின் பற்றும் நம்மவர்கள்! இதைக்கவனித்து இத்தகைய காரியங்களில் அவர்களைப் பின்பற்றினல் ஈடேறுவார்கள். அதை விட்டு நமக்குத் தகுதியல்லாத விஷயங்களில் அவர்களைப்போல் நடக்கமுயல்வது அழிவிற்கே ஏதுவாகும். ஒரு குடும்பத்தில் வேலைக்காரியாயிருப்பவள் கூட அங்கு பத்திரிகைகளை வாசிக்காமலிருக்கமாட்டாள். இத்தகைய விஷயங்களைக் கவனித்துக் கிரகிக்காவிட்டால் நாவல் வாசிப்பதால் ஒரு பயனுமில்லை. பாமரர்போல் கதைப்போக்கைமட்டும் கவனிப்பது வாசிப்பாகாது.)

அப்போது ஜூன்மாதம் மேற்கு நாடுகளில் புழுக்கமான காலமாதலால் பெரும்பாலோர் தங்கள் நாட்டு மாளிகைக்குப் போவது வழக்கம். ஆனால் இரத்தினசாமிப் பிள்ளையின் வீடு கூடியவரையில் குளிர்ச்சியாயிருப்பதால் அவர்கள் வெளியில் செல்லவில்லை.

அம்புஜம் கடிகாரத்தைப் பார்ப்பதும் சாளரத்தில் போய்ப் பார்ப்பதுமாயிருந்தாள். பின்னர் எல்லம்மாளை நோக்கி, "சிற்றப்பா ஏன் இன்னும் வரவில்லை; இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அவர் முன்னமே வந்துவிடுவதாய்க் கூறினார். இப்போது மணி ஆறுக்குமேலாய் விட்டது" என்றாள்.

எல்ல:—உண்மையில் எனக்குக் காரணம் தெரியவில்லை. நீ பேசாமலிரு. நீ இம்மாதிரி கலவரத்தோடு அலைவதால் எனக்கும் கலவரமுண்டாய்விடும்போ லிருக்கிறது.

அம்பு:—என்வரையில் எனக்குக் கலவரமே. என் சிற்றப்பாவுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்ததென்று என் மனதில் படுகிறது. சிற்றப்பாவுக்கு உஷ்ணம் மூளையில் தாக்கியிருக்குமோ?

எல்ல:—சே சே! அப்படி யொன்றுமில்லை. உன் சிற்றப்பாவுக்கு ஒன்றுமில்லை. அவர் காரியாலயத்தில் ஏதோ அதிக வேலையாய் நின்றிருக்கிறார்.

அம்புஜம், "இல்லை யில்லை. நான் டெலிபோனில் கேட்டுப்பார்த்தேன். காரியாலயம் முன்னமே மூடப்பட்டது" என்றாள்.

எல்லம்மாள், "அப்படியாயின் எங்கோ போயிருப்பார்?" என்றாள்.

அம்புஜம், "அவர் ஐந்து மணிக்குள் வருவதாகக் கூறிச்சென்றாரே" என்றாள். எல்லம்மாள், "சரி. அப்படி

வரவில்லை. அதற்காகக் கலவரப்பட்டுக்கொள்வதில் ஒரு பயனுமில்லை. நீ பொறுமையாயிரு" என்றாள்.

ஆனால் அம்புஜமோ நேரம் ஆகவாக மிக்க கலவரப் பட்டுக்கொண்டு கடிகாரத்தை யடிக்கடிபோய்ப் பார்ப்பதும் சாளரத்தில் போய் நின்று தன் சிறியதந்தை வருகிறாரா வென்று பார்ப்பதுமாக விருந்தாள்.

அம்புஜத்தின் தாய்தந்தையரிருவரும் இல்லை. அவளு டைய குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் மரித்துவிட் டார்கள். இரத்தினசாமிப்பிள்ளை அவளுக்குத் தந்தைபோல் இருந்தார். அவளும் அவரைத் தந்தைபோல் பாவித்தாள். கடைசில் தன்னிடம் வேலைக்காரியாக விருக்கும் எல்லம்மா ளின் மையலில் சிக்கிக்கொண்டு இன்னும் ஒரு மாதத்தில் அவளை மணம் புரியப்போவதாய் அம்புஜத்தினிடம் கூறினர்.

அதைக்கேட்டதே அம்புஜம் மிக்க வியப்படைந்தாள். ஆனால் அவளுக்கு அந்த ஏற்பாடு சற்றும் பிரியமில்லை. ஆயி னும் தன் சிறிய தந்தைக்கு மனம் கோணாமல் நடக்க வேண்டுமென்ற எண்ணத்தால் சரிதான் என்று சம்மதித்த தோடு, தன் சுபாவப்படி எல்லம்மாளை மரியாதை யோடேயே நடத்தி வந்தாள். ஆனால் இவர்கள் இருவர்க் கும் சில விவகாரங்களில் மனவொற்றுமை மட்டும் கிடை யாது.

அம்புஜம் சாளரத்தில் பார்த்துக்கொண்டே யிருந்த போது கடைசியில் அச்சுதம்பிள்ளையின் உயரமான உருவம் வருவதைக் கண்டதும் ஆவலோடுபோய்க் கதவைத்திறந்து தானே நல்வாவுகூறி, "அய்யோ! சிற்றப்பா இன்னும் வரவில்லை. ஏதோ கெடுதி சம்பவித்திருக்கிறது; நாம் என்ன செய்யலாம்" என்றாள்.

அச்சுதம் பிள்ளை, "என் அன்பே! எனக்கொன்

றும் விளங்கவில்லை. சங்கதி யென்ன கூறு பார்ப்போம்" என்றார்.

அம்பு:—"சங்கதி யொன்றுமில்லை. அவர் தினம் மாலை ஐந்து மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்துவிடுவது வழக்கம். இதோ ஏழுமணியாகியும் வரவில்லை. இம்மாதிரி இது காறும் ஒருபோதும் நேர்ந்ததில்லை" என்றாள்.

அப்போது அங்குவந்த எல்லம்மாள், "வாரும் அச்சு தம்பிள்ளையவாள். நமது அம்புஜம் வீணாய்க் கலவரமடைகிறாள். இவள் சிற்றப்பா தம்மைத்தாம் காப்பாற்றிக் கொள்வார் என்றே நான் நம்புகிறேன்" என்றாள்.

அச்சுதம் பிள்ளை, "அது என்னமோ உண்மையே; ஆனால் அம்புஜம் கூறுகிறபடி இது அசாதாரணமானதாயிருக்கிறது" என்றார். ஏனெனில் அச்சமயம்தான் முதல் முதல் அவர் மனதிலும் கொஞ்சம் கலக்கம் உதித்தது.

எல்லம்மாள் கேலியாய் நகைத்துப் பத்திரிகையை வாசிக்கத் தொடங்கினாள். அச்சுதம் பிள்ளை அம்புஜத்தின் மேல் காதல்கொண் டிருப்பது குடும்பத்தில் தெரிந்த விஷயம். அவர் அங்கு அடிக்கடி வருபவராதலால் அவருக்கு மரியாதைச் சடங்குகள் ஒன்றும் அவசியமில்லை. ஆகையால் வந்ததும் அங்கிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு சுருட்டுப்பிடிக்கத் தொடங்கினார். அம்புஜம் கடிகாரத்தைப் பார்ப்பதும் சாளரத்தில் சென்று வெளியில் பார்ப்பதுமாக அலைந்துகொண் டிருந்தாள்.

எல்லம்மாள், "நாங்கள் எப்போதும் ஏழு மணிக்குமேல் போஜனத்திற்குக் காத்திருக்கும் வழக்கமில்லை" என்றாள். அந்த வார்த்தைகளை "ஏழுமணி யாய்விட்டது. இனிக் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. போஜனம்செய்ய வாருங்கள்" என்ற கட்டளையாகவும் கருதலாம். அல்லது, "ஏழு

மணியாய் விட்டதே. இனி நாம் சாப்பிடலாமா?" என்று கேட்பதுபோலும் கருதலாம்.

* * * * * *

இரத்தினசாமிப் பிள்ளையின் வீட்டில் மேற்கண்ட விவகாரங்கள் நடைபெறும்போது வேறிடத்தில் நடக்கும் சங்கதிகளைக் கவனிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. போலீஸ் துப்பறியும் இலாகா பிரதம காரியாலயத்தில் இன்ஸ்பெக்டர் கள்ளழகம்பிள்ளை இரவு நகரக்காவலுக்கு ஆட்களை நியமனம் செய்துகொண்டிருக்கிறார். அப்போது மணி சுமார் ஆறிருக்கும். திடீலென்று டெலிபோன் மணியடிக்கவும் 'என்ன சங்கதி?' யென்று கேட்டார்.

யாரோ, "இ....இ...இது போலீஸ் ஸ்டேஷனா?" என்று கேட்டார்கள்.

இன்ஸ்பெக்டர்:—ஆம் ஆம். யார் கேட்பது?

பதிலுக்கு, "இரத்தனசாமிப்பிள்ளை இறந்து போனார்" என்று கேட்டது.

பேசுவது ஒரு அன்னிய நாட்டு ஸ்திரீயின் குரலாக விருந்தது. இன்ஸ்பெக்டர், "என்ன கூறுகிறாய் சரியாய்க் கேட்கவில்லை. நீ எங்கிருந்து பேசுகிறாய்? அங்கே என்ன வேறு சந்தடிகள்?" என்று கேட்டார்.

அம்மாது, "இங்கே குழந்தைகளுக்கு இருமல்" என்றாள். இன்ஸ்பெக்டர், "குழந்தைகள் போடும் சத்தத்திற் கதிகமாக விருக்கிறது. நீ யார்? உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

அம்மாது:—"அதைப்பற்றி யவசியமில்லை. இரத்தினசாமிப் பிள்ளை இறந்து போனார். வந்து தேகத்தை யெடுத்துக்கொண்டு போங்கள்" என்றாள்.

இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டு, "இரத்தினசாமிப்பிள்ளை இறந்துபோனாரா? எந்த விடத்தில்?" என்றார்.

அம்மாது, "கற்பகச்சோலையில் - பந்தாடும் இடத்திற் கருகில் அவர் சவம் கிடக்கிறது; வந்து தேகத்தை எடுத்துச் செல்லுங்கள்" என்றாள்.

இன்ஸ்:—"உன் பெயரைக்கூறு" என்றார். பன் முறை கூவியும் பதில் இல்லை. அவள் டெலிபோனை விட்டுப் போய்விட்டாள் என்பது தெரிந்தது.

இன்ஸ்பெக்டர், "ஆபாசம்; யாரோ அதிகப்பிரசங்கி; கேலிக்கு உளறுகிறாள். ஆயினும் அபூர்வசங்கதி-இரத்தின சாமிப்பிள்ளை - ஹா! ஒருசமையம் உண்மையாயிருந்தால்... எதற்கும் அவர் வீட்டில் விசாரித்துப் பார்ப்போம்" என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டு டெலிபோனில் கேட்கத் தொடங்கி வீணாய் கலவரமுண்டாக்கிவிட லாகாதென்று கருதி, "இரத்தினசாமிப்பிள்ளை வீட்டிலிருக்கிறாரா?" என்று மட்டும் கேட்டார். அவர் இன்னும் வீட்டிற்கு வரவில்லை" என்று பதில் வந்தது. பிறகு அவருடைய காரியாலயத்திற்கு டெலிபோன் கொடுத்தார். பதில் இல்லை. அங்கு ஒருவருமில்லை. மணி ஆறாகிவிடவே காரியாலயம் மூடப்பட்டதென்று தெரிந்துகொண்டார். தமக்குத்தாமே சற்று சிந்தித்து,

"சே! இதில் ஏதோ இருக்கிறதென்றே புலப்படுகிறது" என்று கூறி விட்டுக் கற்பகச் சொலையருகில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சங்கதியை யறிவித்தார். அந்த ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் பெரியசாமிப்பிள்ளை இருந்தார். அவர் சங்கதியைக் கேட்டதும், தோட்களை யசைத்துக்கொண்டு சில துப்பறியும் ஆசாமிகளையும் போலீஸ்காரரையும் அழைத்துக்கொண்டு மோடார் வண்டியிலேறிக் கற்பகச்சோலைக்குப் புறப்பட்டார். அதன் ஓரத்தில் பந்தாடும் இடம் இருக்கிறது. அவர்கள் அதைக்கடந்து சென்ற போது கற்பகச்சோலை யென்ற தோட்டத்தின்

ஓரத்தில் மரங்கள் நெருங்கியிருந்த விடத்தில் ஒரு ஆள் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். முதல் முதல் துப்பறி பவர்களில் ஒருவன் பார்த்துக் கூவினன்.

உடனே யாவரும் வண்டியிலிருந்து குதித்து ஓடி அரு கிற் சென்று பார்த்தார்கள். அங்கு பூமி காடு முரடாக விருந்தது. இரத்னசாமிப்பிள்ளையின் தேகம் தரையில் கிடந்தது. அவர் உத்தியோகத்திற்குச் செல்லும்போது அணியும் உடையே யணிந்திருந்தார். தொப்பி அருகில் விழுந்துகிடந்தது. அவர் கரங்கள் முஷ்டி பிடித்தபடி யிருந்தன. முகத்தில் மிக்ககோபமான விகார முண்டாயிருந் தது. அது குரூரமான மரணம் என்று புலப்பட்டது.

பெரியசாமிப்பிள்ளை "பாவம்! சண்டையிட்டிருக்கிறார். அவரால் முடியவில்லை. யாரோ கத்தியால் குத்திவிட் டிருக்கிறார்கள்" என்றான்.

சவத்தின் சட்டையில் மார்பில் இரத்தம் தோய்ந்திருந் தது. சட்டையை விலக்கிப் பார்த்தபோது இருதயத்தில் ஆயுதத்தால் நேராய்க் குத்தப்பட்டிருந்தது. அவர் தம்மா லான வரையில் போராடியும் பயன் படவில்லை யென்று தெரிந்தது. யாவரும் ஆவலோடு உளவுதேடினார்கள்; ஆனால் இறந்தவர் தேகமும் அவரிடமிருந்த பொருள்களும் தவிர, வேறொன்றும் அகப்படவில்லை. அவர் விழுந்திருந்த இடம் பாதைக்கு அதிக தூரத்திலில்லை. ஆனால் நெருங்கிய செடி களாலும், குத்துக் கற்களாலும், உயரமான பட்டுப்போன மரங்களாலும், பாதையில் செல்வோர் கண்களுக்குந் புலப் படாதபடி அத்தேகம் மறைக்கப்பட்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் பெரியசாமிப்பிள்ளை "காலடி ஒன்று மில்லையா பாருங்கள்" என்றான்.

துப்பறியும் கிருஷ்டப்பன் என்பவன் "ஒன்றுமே யில்லை. இங்கொரு காலடி அங்கொரு காலடியிருக்கிறது.

மனிதர் காலடியே. ஆனால் நன்றாக விளங்கக்கூடியது ஒன்று கூட இல்லை" என்றான்.

இன்ஸ்பெக்டர்:—"இந்த இடம் கல்லும் புல்லும் நிறைந்ததாக விருக்கிறது. ஆயினும் நன்றாகப் பாருங்கள். ஏதேனும் சிறிய பொருள்கள் விழுந்திருக்கின்றனவா பாருங்கள். சண்டை நடந்த இடத்தில் ஏதேனும் உடைந்து விழுந்த பொத்தான், விரற் சட்டை, கைக்குட்டை, முதலியவைகளில் எது வாயினும் இருக்கிறதா பாருங்கள். உளவளிக்கத்தக்க ஏதோனுமொரு சிறு வஸ்துவைக் கூட விடாமற்செல்கிறவன் மிக்க புத்திசாலியான கொலையாளியாக வல்லவோ இருக்க வேண்டும்" என்றான்.

கிருஷ்டப்பன்:—அப்படி உளவு விட்டுச்செல்பவன் சுத்த மூடக்கொலையாளியாக வல்லவோ இருக்கவேண்டும். இந்த வேலை முட்டாள் செய்தவேலை யல்ல. பெரும்பாலும் அந்த ஆட்கள் கொஞ்சகாலமாக, சிலமாதங்களாகக்கூட இவர்மேல் கண்ணோக்கம் வைத்திருக்கலாகும். இவன் போன்ற இலட்சாதிபதிகளே ஈட்டியாட்களுக்குப் பிரியமான வேட்டை.

இன்ஸ்:—ஏன் ஈட்டியாள் என்கிறாய்?

கிருஷ்;—முதலில் சங்கதியனுப்பியவள் தென்னாட்டு ஸ்திரீ யல்லவா? அவள் ஆட்களில் சேர்ந்தவர்களே யிதைச் செய்திருக்கலாகும்; அப்படிக்கின்றேல் இச்சங்கதி யவளுக் கெப்படித் தெரியும்?

இன்ஸ்:—களவு நடந்ததாகத் தோன்றவில்லையே. இதோ இவருடைய கடிகாரம், பொன் பொத்தான்கள் யாவு மிருக்கின்றனவே.

கிருஷ்:—"கடிதங்கள், பத்திரங்கள் இருந்திருக்கலாகாதோ?" என்றான்.

இன்ஸ்பெக்டர் பெரியசாமிப்பிள்ளை, இறந்தவனுடைய சட்டைச் சேபிகளைச் சோதித்துப் பார்த்து, "இதோ சில உண்டிகள், பத்திரங்களிருக்கின்றன. ஒன்றும் களவு போகவில்லை" என்றான்.

கிருஷ்:—இவற்றினும் மதிப்புள்ளவை யிருந்திருக்கலா மல்லவா?.

இன்ஸ்:—அப்படியாயின் ஈட்டியாளல்ல இதைச்செய்தவன்; உன் உத்தேசங்கள் காரணத்தோடு பொருத்தமாயில்லை, சரி, எப்படியாயினும் இது நகரில் குழப்பத்தை யுண்டாக்கும்; சில வருடங்களாக உண்டாகியிராத கிளர்ச்சியை யுண்டாக்கும்; இரத்தினசாமிப்பிள்ளை—அப்பா! பத்திரிகைகளெல்லாம் பெரிய கூக்குரலிடும்.

கிருஷ்:—அவர் குடும்பத்தில் யாரார் இருக்கிறார்கள்? மனைவி...

இன்ஸ்:—"மனைவியுமில்லை மக்களுமில்லை; சகோதரன் புத்திரி யொருபெண் இருக்கிறாள்; ஆனால் அவர், அவளைக் கண்ணுக்குக் கண்ணாய்ப் பராமரித்து வந்தார்; நாம் அவருடைய வீட்டிற்குச் சங்கதி தெரிவிக்கும்படி கள்ளழகம் பிள்ளைக்கு அறிவிப்போம்; இது மிக்க கோரமான சம்பவம்" என்றான்.

பெரியசாமிப் பிள்ளை சவத்தை யெடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றதும் கள்ளழகம் பிள்ளைக்கு டெலிபோன் மூலமாய்ச் சங்கதியை யறிவித்து, இரத்தினசாமிப் பிள்ளையின் வீட்டிற்குச் சங்கதி தெரிவிக்கும்படி கூறினான்.

---

## 2-வது அத்தியாயம்.

கள்ளழகம் பிள்ளை, இரத்தினசாமிப் பிள்ளையின் வீட்டிற்குச் சங்கதி யறிவிக்கும்போது ஏழுமணிக்குமேலாய்விட்டது. டெலிபோன் மணியடித்ததே அம்புஜம் "ஆ கடைசியில் - இது சிற்றப்பாவே" என்று கூறிக்கொண்டே போய் 'யார்?' என்று கேட்டாள்.

"நீ யார்?"என்று கள்ளழகம்பிள்ளை கேட்டார். அவள், நான் அம்புஜம் என்றாள். "அம்புஜமென்றால் யார்? இரத்தினசாமிப்பிள்ளைக்கு என்ன வேண்டும்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். அம்புஜம் "அவர் என் சிற்றப்பா" என்றதே அவர் "இன்னும் யார் அங்கிருக்கிறவர்? ஆடவர்?" என்றதே அம்புஜம் "அச்சுதம்பிள்ளை யிருக்கிறார்" என்றாள். இன்ஸ்பெக்டர் அச்சுதம் பிள்ளையைக் கூப்பிட்டு, "நீர் அச்சுதம் பிள்ளைதானா? நான் இன்ஸ்பெக்டர் கள்ளழகம் பிள்ளை" என்றார்.

அச்சுதம்பிள்ளை "ஆம் ஆம். என்ன சங்கதி?" என்றார். இன்ஸ்பெக்டர் "சங்கதியை அம்புஜம்மாளிடம் கூற முடியவில்லை. இரத்தினசாமிப் பிள்ளை இறந்து போனார். அவர் தேகம் கற்பகச்சோலையில் இருக்கிறது. நீர் அங்கு வந்து அவர் சவந்தான் என்று சாட்சி கூறுகிறீரா?" என்றார்.

அச்சுதம் பிள்ளை "ஒரு விநாடி பொறும்" என்று கூறிவிட்டு அம்புஜத்தை நோக்கி "அம்புஜம்! நீ கூறியது சரிதான்-ஏதோ சம்பவித்திருக்கிறது" என்றார்.
அம்பு:—"அய்யோ! சிற்றப்பாவுக்கா?" என்றாள்.

அச்சுதம்பிள்ளை தடுமாற்றத்தோடு "ஆம். அவருக்குக் காயம் - அடிபட்டிருக்கிறது. அவர்கள், அவர் இருக்கு

மிடத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்போது அவர் கூறிய சமாசாரம் அதுதான்" என்றார்.

அம்புஜம் முகம் வெளுத்து அசைவற்று நின்று "எனக்குத் தெரியும். நீர் கூறவேண்டியதில்லை. அவர் இறந்து போனார்" என்றாள்.

அச்சுதம்பிள்ளை மறுத்துக் கூறாமல் மௌனமாய் இருந்தார். அவர் சில வருடங்களாக அம்புஜத்தின் மேல் காதல் கொண்டிருக்கிறார். அம்புஜத்திற்கும் அவர்மேல் பிரியமேயாயினும் அவள் அவரை மணம் புரிவதாய் வாக்களிக்கவில்லை. ஆயினும் அச்சுதம்பிள்ளை நம்பிக்கையோடு பொறுமையாய் இருந்து வருகிறார்.

அதற்குள் இன்ஸ்பெக்டர் டெலிபோனில் கூப்பிட்டுக் கொண்டிருந்ததால் அச்சுதம்பிள்ளை "சரி. வேறு வழியில்லை. மரண விசாரணை செய்யும் உத்தியோகஸ்தருக்குச் சங்கதி தெரிவித்துவிடும். நான் உடனே வருகிறேன். நீர் கூறும் சங்கதி யுண்மை யென்று நிச்சயமாய்த் தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

இன்ஸ்:—"சந்தேகத்திற் கிடமேயில்லை. அவர் ஜேபியில் இருந்த சில கடிதங்களால் அவர்தான் என்று தெரிவதோடு போலீஸ்காரரில் சிலரும் அவரைத் தெரிந்தவர்களாக விருக்கிறார்கள்" என்றான்.

அம்புஜம் மஞ்சத்தில் போய் சாய்ந்துகொண்டு தேம்பித்தேம்பி யழத் தொடங்கினாள். எல்லம்மாள் அவள் சிரசைத் தடவிக்கொடுத்து, "பாபம் அழட்டும் அழட்டும். அப்போது தான் துக்கம் கொஞ்சம் தணியும். இப்போது நான்றான் யாவும் கவனிக்கவேண்டியவளா யிருக்கிறேன். சங்கதி யென்ன யாவும் கூறும்" என்று அச்சுதம்பிள்ளையைக் கேட்டாள்.

அச்சமயம் எல்லம்மாள் முகத்தில் பெருமையும் அதிகாரமுமாகிய குறிகளிருந்தனவே யன்றி துயரக்குறி தோன்றவில்லை. அச்சுதம்பிள்ளை இரத்னசாமிப் பிள்ளையின் வக்கீல் ஆகையால் தானே எதையும் செய்யக்கூடிய சுதந்தரம் உடையவனல்ல. அவன் இரத்னசாமிப் பிள்ளைக்கும் அம்புஜத்திற்கும் நெடுநாள் சினேகனுகவே யிருந்தாலும் வீட்டுக் காரியஸ்தியாகிய எல்லம்மாளிடம் சாதாரண அறிமுகமட்டுமே யுடையவனுக விருந்தான்.

அவன் அம்மாதை நோக்கி "எனக்குக் கொஞ்சமே தெரியும். "இரத்னசாமிப்பிள்ளை கொல்லப்பட்டார் என்றும் குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சவத்தைப்பற்றி அத்தாட்சி கூறவேண்டுமென்றும் இன்ஸ்பெக்டர் அறிவிக்கிறார். நான் இறந்தவருடைய வக்கிலாக இருக்கிறபடியால் நான்--செல்லவேண்டிய கடமையாகவே யிருக்கிறது - செல்லக்கூடியவர்கள் வேறு யாரேனு மிருப்பதாகவும் தெரியவில்லை" என்று கூறி, அச்சமையம் எழுந்து உட்கார்ந்து நீர் வடியும் கண்களோடு தன்னை நோக்கும் அம்புஜத்தின் பக்கம் திரும்பினுன்.

அம்புஜம் "அய்யோ போங்கள் போங்கள்! நீங்கள் தான் போகவேண்டியதே. வேறு யார் இருக்கிறார்கள். நான் போகலாகாது. என்? நான் வரவேண்டியது அவசியமோ? நான் வரவேண்டுமென்று நீர் கருதவில்லையே" என்றாள்.

எல்லம்மாள் "குழந்தாய் அம்புஜம். இல்லை யில்லை. உன்னைப் போகும்படி யார் கூறுவார்கள். அச்சுதம்பிள்ளை தயவாய்த் தாம் செல்வதாய் வாக்களித்தார்" என்றாள்.

அச்சு:—"நான் டாக்டர் பல்லவராயரிடம் சென்று அவரையு மழைத்துக்கொண்டு செல்கிறேன். அம்புஜம்! நீ யுன்னறைக்குச் செல். நான் வர நெடுநேரம் செல்

லும்" என்று கூறிவிட்டுச் சட்டையையும் தொப்பியையும் மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

எல்லம்மாள்:—"அம்புஜத்தை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நான் எல்லாம் பார்த்துக்கொள்கிறேன்" என்று, வாயிற்படி வரையிற் கூடச்சென்று "நீ வரும்போது, கூட அவருடைய தேகத்தைக் கொண்டுவருவீரல்லவா?" என்றாள்.

அச்சு:—"அதைப்பற்றி நிச்சயமாய்க் கூற முடியாது. நடக்கவேண்டிய சடங்குகளிருக்கின்றன. அம்புஜத்தைப் பத்திரமாய் பார்த்துக்கொள். நான் வரும்போது கோரக் காட்சியாயிருக்கும்" என்றான்.

எல்ல:—நான் இங்கு யாவும் பார்த்துக்கொள்கிறேன். ஆனவரையில் இச்சமயத்தில் நீ யிங்கிருந்தது மிக்க நல்ல அதிஷ்டம்.

அச்சு:—"அது ஒரு விஷயத்தில உண்மையே. நான் இங்கில்லாவிட்டால் அம்புஜம் கட்டாயமாகத்தான் போகவேண்டுமென்று செல்வாள்" என்று கூறிக்கொண்டே துரிதமாய்ச் சென்றான்.

டாக்டர் பல்லவராயரின் வீடு சமீபத்திலேயே யிருப்பதால் அச்சுதம்பிள்ளை துரிதமாய்ச் சென்றான். பல்லவராயம்பிள்ளை நற்காலமாய் வீட்டிலிருந்தார். உடனே இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள்.

அச்சுதம் பிள்ளை சென்றபின் எல்லம்மாள் அம்புஜத்தை நோக்கி, "உனக்கு மனம் நிம்மதி யடையத்தக்க ஔஷதம் கொஞ்சம் அளிக்கிறேன். அதன்பிறகு நீபோய்ப் பேசாமல் படுத்துக்கொள்ளவேண்டும்" என்றாள்.

அம்பு:—"பேஷ், அத்தகைய காரியம் ஒன்றும் நீ செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்த விடத்தில் உனக்கு

எவ்வளவு பாத்தியதை இருக்கிறதோ அவ்வளவும் எனக்கிருக்கிறது" என்ருள்.

எல்ல:—சந்தேகமின்றி யிருக்கிறது. உனக்கு உண்டாகும் மனவியாகூலத்தைக் குறைக்கலாம் என்பதே என் எண்ணம்.

அம்பு:—குறைக்கவேண்டியது ஒன்றுமேயில்லை. எனக்கு அப்படி விருப்பமில்லை. அதற்குமாருக இதைப்பற்றிய விஷயம் யாவும் பூரணமாய் நான் அறிந்துகொள்ள வேண்டும். நான் ஒரு குழந்தையைப்போல் நடத்தப் பட இடந்தரமாட்டேன். இந்த விஷயத்தில் நான் உதவி செய்யவேண்டும்.

எல்ல :—ஆனுல், என் அன்பே! நாம் செய்யத்தக்கது ஒன்றுமில்லையே.

அம்பு:—"உதவி செய்ய வேண்டியது இருக்கிறது - என் சிற்றப்பா கொல்லப்பட்டிருந்தால் அவரை யாரோ கொன்றிருக்கவேண்டும். அவனைக் கண்டுபிடித்து வஞ் சந் தீர்த்துக்கொள்கிறவரையில் நான் கண்ணுறங்க மாட்டேன். நீ எப்படி பேசாமல் சாந்தமாய் உட் கார்ந்துகொண்டிருக்கிருய். நீ அவர்மேல் காதல் கொண் டிருக்கிறதுபோல் நடக்கிறவள். நீ எப்படி சாந்தமாய் உட்கார்ந்துகொண்டிருக்கிருய்?" என்று ஆத்திரத்தோடு கூறினுள்.

எல்ல:—ஆ! ஆ! அம்புஜம். அதிகமாய்க் கலவரப்பட்டு விடாதே. உன் மனம் மிக்க கலவரமான வேதனையி லிருக்குமென்று எனக்குத் தெரியும். ஆனுல்—

அம்பு:—"இதோ! நீயொன்றும் பேசவேண்டாம், எனக்கு வெறி யுண்டாய்விடும்" என்ருள்.

எல்லம்மாள் பேசாமல்போய் அறைகளைச் சுத்தம்

செய்யத்தொடங்கினாள். அம்புஜம் பேசியமாதிரியால் அவ ளுக்குப் பயமும் மனவருத்தமுமுண்டாயிற்று. கடைசியில் "குழந்தாய்! கொஞ்சம் சாப்பிடு. இருவரும் போய்க் கொஞ்சம் புசிக்க முயலலாம்" என்றாள்.

அம்புஜம் வெறுப்போடு அவளை நோக்கிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டாள். எல்லம்மாள் தனியே போஜன அறைக்குச் சென்றாள். அங்கு சென்று சமையற்காரனை யழைத்து, "சுந்தரம்! எஜமானுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்தது - சற்றுநேரங் கழித்து அவரை வீட்டிற்குக் கொண்டுவருவார்கள். அதுவரையில் நீ யாருக்கும் ஒன் றுமே கூறவேண்டாம். எனக்கு மிக்க பசியாயிருக்கிறது. ஆகாரம் கொண்டுவா!" என்றாள்.

நல்ல அறுசுவையுண்டிகள் வட்டிக்கப்பட்டதும் எல் லம்மாள் உட்கார்ந்து போஜனம்செய்யத் தொடங்கினாள். அவள் சிந்தனை யெங்கோசென்றது. அதனால் குறைவான ஆகாரமே பொசித்தாள். அடிக்கடி அவள் முகம் சுளித்துக் கொண்டது. ஒரு சமையம் தனக்குத்தானே நகைத்துக் கொண்டாள். அவள் ஏதோ பெரிய ஆலோசனையி லிருப்பவள்போல் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள் - அவள் கண்களில் ஒரு துளிச்சலம்கூட வரவில்லை. அவள் முகம் துயரத்தால் வாட்டமடையவில்லை. அவள் அப்போதைக் கப்போது சமையல்காரனுக்கும் மற்ற வேலைக்காரருக்கும் கட்டளை யிடும்போது அவள் இதுகாறுமிருந்ததை விட அதிகமாய்த் தலைநிமிர்ந்து அதிகாரத் தொனியோடு கூறினாள்.

போஜனம் செய்தபின் எல்லம்மாள் அம்புஜம் இருக் கும் அறைக்கு வந்து உட்கார்ந்தாள். ஒவ்வொரு சமயம் இருவரும் பேசினாலும் சாதாரணமான ஏற்பாடுகளைப்பற்றிப்

பேசினர்களேயன்றி ஒருவருக்கொருவர் தேறுதலான வார்த்தை யொன்றுகூட பேச வில்லை.

கடைசியில் வெளியில் ஆட்கள்வரும் சந்தடிகேட்டது. அச்சுதம்பிள்ளை சவத்தைக் கொண்டுவருகிருனென்று அவர்களுக்குத் தெரியும். அச்சுதம்பிள்ளை முன்னே யுள்ளே வந்து மாதர் இருவரையும் அவர்கள் இருக்கும் அறையிலேயே நிற்கவைத்துக்கொண் டிருந்தார். ஆட்கள் சவத்தைக்கொண்டுவந்து இரத்னசாமிப்பிள்ளையின் படுக்கையறையில் வைத்தார்கள். அதன்பின் டாக்டர் பல்லவராயரும் அவர்களிருக்கும் அறைக்கு வந்தார்.

அவர் அங்கு வந்ததும் சுருக்கமாய் "இரத்னசாமிப்பிள்ளை கொலைசெய்யப்பட்டார். ஈட்டியால் அவர் குத்தப்பட்டார். அவர் சுமார் ஆறுமணி நேரத்திற்குமுன் இறந்துபோயிருக்கிருர். இன்னும் அதற்குமுன்பே யிருக்கலாகும்" என்ருன.

அம்புஜம் தைரியத்தோடும் கோபத்தோடும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் துணிகரமுடையவள் போல் "அவரை யார் கொன்றது ?" என்று கேட்டாள்.

டாக்டர் பல்லவராயர்:—"யாரென்று இன்னும் அவர்களுக்குத் தெரியவில்லை. மரண விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர் அதைக்கண்டறிய முயலவேண்டும்" என்ருர்.

அதைக்கேட்டதே எல்லம்மாள் மிக்க பீதியோடு மரண விசாரணை யுத்தியோகஸ்தரா?" என்ருள்.

அம்புஜம் அவளை யுற்று நோக்கி, "சந்தேகமின்றி மாணவிசாரணை செய்வோர்தான். வேறேயார் அவரைக் கொன்ற படுபாவியைக் கண்டு பிடிப்பது - அவனைக் கொல்ல வேண்டியது? " என்ருள்.

அம்புஜத்தின் தீரமொழிகளைக் கேட்ட அனைவரும்

அவளை யுற்றுநோக்கினர்கள். அவளுடைய துணிகரமான மொழிகளைக் கேட்ட போலீஸார் வெளியில் கூடத்திலிருந்த படி கதவின் சந்தில் அவள் முகத்தை நோக்கினர்கள். அவள் மனம் ஆத்திரத்தோடு துடித்தது - அவள் கண்கள் அக்கினிச் சுவாலையாய்ச் சொலித்தன. அவள் மிக்க கோபத்தையடக்கிக்கொண்டு பேசினள்.

அவள் டாக்டர் பல்லவராயரை நோக்கி "இப்போது முதலில் செய்யவேண்டிய வேலை யென்ன?" என்று கேட்டுக்கொண்டே வெளியிலிருந்த போலீஸ்காரரையும் நோக்கினள்.

அச்சு:—"அம்புஜம்! பொறு-சற்று பொறு-சற்று ஆலோசனை செய்வோம்" என்ருர்.

அம்பு:—ஆலோசிக்கவேண்டியது ஒன்றுமேயில்லை. சிற்றப்பா இறந்து போனர். அவரை யார் கொன்ருர்களென்பதைக் கண்டுபிடித்தே தீரவேண்டும் - திறமையுள்ள துப்பறிவோரைக் கொண்டு அவனைப்பிடித்துத் தண்டிக்கிறவரையில் நாம் இளைப்பாறலாகாது.

எல்ல:—சந்தேகமின்றி - சந்தேகமின்றி குழந்தாய்! ஆயினும் நாம் இப்படி மிக்க அவசரப்படலாகாது.

அம்பு:—பேஷ் - வெகு நேர்த்தி - நாம் உடனே மிக்க துரிதமாய் நமது முயற்சிகளைச் செய்யவேண்டும். எவ்வளவு ஆலசியம் செய்கிருேமோ அவ்வளவும் கொலைசெய்த பாதகனுக்குத் தப்பித்துக்கொள்ள உதவி செய்ததாகும்.

இம்மொழிகளைக் கேட்டதும் அச்சுதம்பிள்ளையும் டாக்டர் பல்லவராயரும் சொல்லொணு வியப்போடு அவளை நோக்கினர்கள். இத்தகைய ஆலோசனையுள்ள புத்தியை இவள் எங்கிருந்து கற்றுக்கொண்டாள் என்று அவர்களிருவரும் பிரமித்து விட்டார்கள். ஒருபெண்பிள்ளை

துப்பறியும் நுட்பத்தை உணர்ந்திருப்பது அவர்களுக்கு மிக்க வியப்பை யுண்டாக்கிவிட்டது.

அச்சுதம்பிள்ளை துயரத்தோடு:—"இவள் கூறுவது சரியே. இத்தகைய விவகாரங்களில் அனுவசியமான ஆலசியம் கூடாது - ஆனால் சட்டத்தின்படி விவகாரம் நிதானமாகவே நடக்கும். ஆயினும் கூடியவரையில் நம்மாலாகவேண்டிய யாவும் செய்யப்படும். அதைப்பற்றி நீ பூரணமாக நம்பலாம். மாணவிசாரணை செய்யும் உத்தியோகஸ்தர் மாடிமேல் வந்திருக்கிறார். அவர் கீழே வந்தால் உன்னிடம் சம்பாஷிக்க விரும்புவார். நீ மறுத்துக் கூறமாட்டாயே?" என்றார்.

அம்புஜம், இல்லையில்லை-நான் அவரைக்காண விரும்புகிறேன். சிற்றப்பா யாரால் கொல்லப்பட்டார் என்ற சங்கதி ஒன்றுமே யின்னும் தெரியவில்லை.

மாணவிசாரணை செய்யும் அதிகாரி கீழிறங்கி அம்புஜம் அச்சுதம்பிள்ளை முதலியவர்கள் இருக்கும் கூடத்திற்கு வந்தார். அவர் சற்று குட்டையாய்த் தடித்தமனிதர். சுறுசுறுப்பானவர். வந்து உட்கார்ந்ததும் அங்குள்ளவர்களை நோக்கி "மிக்க துக்ககாமான சம்பவம் - நேர்த்தியான மனிதன் - பாபம் இப்படி நல்லவயதில் அகால மாணத்திற்காளாவது மிகுந்தகோரம்..." என்றார்.

அம்புஜம் கோபத்தோடு அவரை நோக்கி "அது எங்களுக்குத் தெரியும் அய்யா. யார் கொன்றவர்கள்? நீர் என்ன கண்டு பிடித்தீர்?" என்றாள்.

கோரனர்:—"இன்னும் ஒன்றும் அகப்படவில்லை. உனது சிற்றப்பா ஈட்டியால் குத்திக்கொல்லப்பட்டார். கற்பகச்சோலையில் கொல்லப்பட்டார். அவருடைய தேகம் அங்கு மறைவான ஒரு இடத்திலிருந்தது. கொலையாளியைப்பற்றி ஒரு உளவும் அகப்படவில்லை.

போலீஸாருக்கு யாரோ டெலிபோன் மூலமாய்ச் சங்கதி யறிவித்திருக்கிறார்கள். அது ஒரு ஆச்சரிய சம்வமே. போலீஸ் தலைமைஸ்தலத்திற்குத் தென்னாட்டு ஸ்திரீ யொருத்தி சங்கதியை யறிவித்ததாகக் கூறுகிறார்கள்" என்றார்.

அச்சு:—மிக்க ஆச்சரியம், தென் நாட்டாளா?

கோர:—ஆம். அவள் குரலால் அப்படித் தெரிந்ததாம்.

டாக்டர்:—"குத்திட்டி அல்லது தென்நாட்டார் உபயோகிக்கும் கூரான ஒருவித ஈட்டியால் குத்தியிருக்கவேண்டும். அது தென்நாட்டார் வேலை யென்றே தெரிகிறது" என்று கூறிவிட்டு அம்புஜத்தை நோக்கி "உனது சிறியதந்தைக்குத் தென்நாட்டாரில் யாரேனும் விரோதியிருக்கிறார்களோ?" என்று வினவினர்.

அம்பு:—அப்படி யிருப்பதாய்த் தெரியவில்லை. அதிலும் அவரைக் கொல்லக்கூடிய அத்தகைய விரோதி யார் இருக்கிறார்கள்.

கோர:—அப்படியாயின் சாதாரணமான விரோதிகள் இருக்கிறார்கள்.

அம்பு:—சிற்றப்பா கொஞ்சம் கண்டிப்பானவர். முன் கோபமுண்டு. அவருக்கு அனேகர் அறிமுகமானவர் இருக்கிறார்கள். அவர்களில் சிலரிடம் மனத்தாபமிருக்கலாம். ஆனால் இத்தகைய விவகாரத்திற்கு இடமளிக்கத்தக்க மனத்தாபம் இராதென்பது உண்மை.

கோர:—இப்போது யாரோ ஒருவர் அவரைக் கொன்றிருக்கிறார்கள். அவருக்குத் தெரிந்த விரோதியை விட வேறு யார் இப்படிச் செய்யக்கூடியவர்கள்? எதற்கும் உனக்குத் தெரிந்த வரையில் அவருடைய விரோதிகளில் சிலரைக் கூறு பார்ப்போம்.

அம்பு:—இந்த விஷயத்தில் சந்தேகிக்கத்தக்க அத்தகைய

விரோதிகள் திட்டமாய் இல்லையென்றே கூறுவேன். நான் கருணாகரம்பிள்ளை சிந்தாமணிப்பிள்ளை இப்படிப் பட்டவர்களைத்தான் சிந்தித்துக்கொண்டேன். கருணாகரம் பிள்ளைக்கும் சிற்றப்பாவுக்கும் இராஜாங்க விவகாரங்களில் அபிப்பிராய பேதமுண்டு. அவ்விஷயத்தில் வாதமும் சச்சரவும் நேர்வதுண்டு. சிந்தாமணிப்பிள்ளை தாவரசாஸ்திர ஆராய்ச்சி செய்பவர். சிற்றப்பாவுக்கும் அதில் பழக்கமுண்டு. அவர்களிருவருக்கும் அந்த விஷயத்தில் நேரிடும் அபிப்பிராய பேதத்தால்தான் சச்சரவு நேர்வதுண்டு. இவைகளெல்லாம் இத்தகைய கொலைக்குக் காரணமென்று கருதலாகுமோ?

அச்சு:—ஒருபோதுமில்லை. எனக்கு அந்த இருவரும் தெரியும். அவர்களுக்கும் இரத்தினசாமிப் பிள்ளைக்கும் உண்மையில் சினேகமே யிருந்தது. இரத்தினசாமிப் பிள்ளை சற்று முன் கோபி. அதனால் இவர்கள் ஒவ்வொரு சமயங்களில் சச்சரவிட்டுக்கொள்வார்கள். ஆனால் அதை யுடனே மறந்து விடுவார்கள்.

அம்பு:—ஆம். அது உண்மையே. சிற்றப்பா ஒவ்வொரு சமையத்தில் என்னை வைது கோபிப்பார். ஆனால் மறு நிமிடமே மிக்க அன்புகாட்டி நடந்துகொள்வார். கோபம் அவருக்கு எப்படிச் சீக்கிரம் வருகிறதோ அப்படியே அது சீக்கிரம் போய்விடும். உண்மையில் அவரைக் கொல்லக்கூடிய விரோதியில்லை. ஒரு தென்னாட்டாள் சங்கதியை யறிவித்தாள் என்பதால் அத் தென்னாட்டு இரகசிய சங்கங்களைச் சேர்ந்த யாரோ தான் இப்படுகொலையைச் செய்திருக்கிறார்கள் என்று என் புத்திக்குப் புலப்படுகிறது.

கோர:—அதைப் போகப்போகக் கவனிக்கவேண்டும். நான் நாளை காலையில் விசாரணையை நடத்துகிறேன். இந்த

இரவு ருசுக்களைச் சேகரிப்பதற்குப் போதுமான கால மில்லை.

அம்புஜம் மிக்க ஆவலோடு, "எங்கிருந்து ருசுக்களைச் சேகரிப்பீர்கள்?" என்றாள்.

கோர:—"எங்கு கிடைக்கிறதோ அங்கே யிருந்து. நான் போலீஸாரை நன்ருக விசாரிக்கவேண்டும். முதல் முதல் டெலிபோன் மூலம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சங்கதியை எவள் அறிவித்தாளோ, அவளைக்கண்டறிய வேண்டும். அது கஷ்டமான வேலையே யாயினும் செய்தே தீரவேண்டும். இவற்றேடு உங்களைச் சரி யாக விசாரித்து இரத்தினசாமிப் பிள்ளையின் பழக்க வழக்கங்களையும் அவர் இன்று எங்கெங்கு சென்ருர் என்றதையும் அறியவேண்டும். காலையில் இங்கி ருந்து செல்லும்போது வழக்கம்போல் சாதாரணமாகத் தானே சென்ருர்?" என்று அம்புஜத்தைக் கேட்டார்.

அம்புஜம் விடையளிப்பதற்குள் எல்லம்மாள், "ஆம் ஆம் வழக்கம்போலவே. விசேஷமாய் அவர் செல்லும் போது கடைசியாய் அவரைக்கண்டவள் நாளுகவே யிருக் கும். நான் அவர் கூடவே தெரு வாயிற்படிவரையில் சென் றேன். நாங்கள் இன்னும் ஒரு மாதத்தில் மணம் புரிந்து கொள்ள விருந்தோம்" என்ருள்.

கோரனர், "பிறகு பகல் முழுதும் அவரிடமிருந்து உனக்கு ஒரு சங்கதியும் வரவில்லையோ?" என்ருர்.

எல்லம்மாள் விடை யளிக்குமுன்,

அம்பு:—இல்லை. போகும்போது மாலை ஐந்து மணிக்கு வந்து விடுவதாகக் கூறினர். அவர் வேலையில் நான் அவருக்கு உதவிசெய்வதுண்டு. அந்த வேளைக்கு அவர் வராமற் போகவே எனக்கு மிக்க கலவரமுண்டாய் விட்டது.

"கடைசியில்....கடைசியில்" என்றதும் அதற்குமேல் பேசமுடியாமல் அழத்தொடங்கினாள்.

கோரனர் எல்லம்மாளை நோக்கி, "நீ கலவரப்படவில்லையோ?" என்று கேட்டார். எல்லம்மாள், "இல்லை நான் அவர் ஏதோ கொஞ்சம் அதிக வேலையால் காரியாலயத்திலேயே அதிக நேரம் நின்றுவிட்டார் என்று கருதினேன்.

கோரனர் அச்சுதம் பிள்ளையை நோக்கி, "நீர் எப்போது அவனைக் கடைசியாகக்கண்டீர்?" என்று கேட்டார்.

அச்சு:—"ஆ! கடந்த வெள்ளிக்கிழமை நான் அவருடைய காரியாலயத்திற்குச் சென்று அவரைக்கண்டு பேசினேன். ஒரு தோட்ட குத்தகையைப்பற்றிப் பேச வேண்டியிருந்தது. அதை விசாரித்துக்கொண்டு இன்று காலை வந்து அதைப்பற்றிக் கூறுவதாய் வாக்களித்தேன். ஆனால் வேறொரு இடத்திற்கு என்னை வரும்படி அவசரமான தந்தி வந்தது. ஆகையால் நான் மாலை வந்து காண்பதாய் அவருக்குக் கடிதம் எழுதினேன். நான் ஐந்து மணிக்குத்தான் நகரத்திற்குத் திரும்பி வந்தேன். இங்குவர உத்தேசித்திருந்தேன். அதற்குள் அம்புஜம் டெலிபோன் மூலமாய்க் கூப்பிடவே உடனே புறப்பட்டு வந்தேன்" என்றார்.

கோரனர், "சரி, நான் இனிச்செல்கிறேன். போலீஸ் ஸ்டேஷனில் ஏதேனும் உளவு கண்டறியலாகும். நாளை காலை சரியாய் பத்துமணிக்கு வந்துவிடுகிறேன்" என்று கூறிச் சென்றார்.

## 3-வது அத்தியாயம்.

கோரனர் சென்றதும் சவப்பெட்டி செய்யும் ஆட்கள் வந்தார்கள். அம்புஜம், "இப்போது அதைப் பற்றிக் கவனிக்க என்னால் முடியாது. என் சிற்றப்பா இறந்து போனது உண்மையா வென்பதே எனக்குச் சரியாய் மன திற் படியவில்லை" என்றாள்.

எல்லம்மாள், "குழந்தாய்! நீ ஒரு தொந்தரையும் எடுத்துக்கொள்ளவேண்டாம். எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்துவிடுகிறேன். அச்சுதம்பிள்ளை யெனக்கு உதவி செய்வார்" என்றாள்.

அம்பு:—"அப்படி யொன்றும் நீ செய்யவேண்டாம். நான் இன்னும் என் சிற்றப்பாவின் சகோதார் புத்திரி யாகவே யிருக்கிறேன். அவருக்குச் செய்யவேண்டிய கடைசி சடங்கை என் பிரியப்படி செய்வேன்" என்றாள்.

எல்லம்மாள் தேன்போன்ற மொழிகளால், "குழந்தாய்! உனக்கு அனுவசியமான தொந்தரை யளிக்கலாகா தென்பதே என் கருத்து" என்று கூறிவிட்டு, பெட்டி செய்வோர் கொண்டுவந்திருந்த கிரைய ஜாப்தாவை வாங்கி அதிலுள்ள பெட்டிகளின் மாதிரிப்படங்களைப்பார்த்து எம்மாதிரி பெட்டி செய்வது, மேலே எத்தகைய சீலை போடுவது, எத்தகைய அலங்காரங்கள் செய்வது என்றவைகளைப்பற்றி ஏற்பாடு செய்யத் தொடங்கினாள்.

அம்புஜம் வெறுப்போடு அவளை நோக்கிக்கொண்டிருந்தாள். எல்லம்மாள், "கடைசி விஷயத்தை யவருக்கு இலட்சணமாகச் செய்யவேண்டியது அவசியமே. நான் கூறுவது சரிதானே?" என்று அச்சுதம்பிள்ளையைக் கேட்டாள். அவர், "ஆம். செய்யவேண்டியதே" என்றார்.

அம்பு:—"நீ என்ன செய்தாலும் செய்துகொள்; என் வரையில் என் சிற்றப்பாவைக் கொன்றவன் எவனோ அவனைக் கண்டுபிடித்து அவன் தண்டனை யடையச் செய்வதே யாவற்றிலும் முக்கியமான காரியம் என்று கருதுகிறேன். அந்த மரணவிசாரணை செய்யும் ஆள் இதைக் கண்டுபிடிப்பான் என்பது சந்தேகமே. அந்த ஆள் சுத்த அசமந்தமான ஆள். அவன் எதையும் கண்டுபிடிக்கமாட்டான்" என்றாள்.

அச்சு:—அம்புஜம்! ஏன்? அவர் இந்த இரவில் என்ன கண்டு பிடித்துவிடக்கூடும்? இது மிக்க மர்மமான விஷயம். இங்கிருக்கும் நமக்கு ஒன்றுமே தெரியவில்லை. நம்மிடம் இவர் என்ன தெரிந்துகொள்வார்?

அம்பு:—ஆயினும் அவருக்கு மூளையாவது சூக்கும புத்தியாவது இல்லை.

அச்சு:—இவர்கள் விசாரித்துத்தான் எதையும் அறிந்து கொள்ளவேண்டும். நீ கூறுவது வேட்டை நாய்போல் உளவறியும் சங்கதி. அதுதான் உன் மனதிலிருப்பது. அது துப்பறிபவர்களால் ஆகவேண்டிய காரியம்.

அம்பு:—"ஆம் தெரியும். அதுதான் நான் முதலில் கூறியது. தாங்கள் நல்ல முதற்றரமான துப்பறிபவர்களை ஏற்பாடு செய்து, அவர்கள் உடனே இதைப்பற்றி வேலை செய்யும்படி செய்யமாட்டீர்களா?" என்றாள்.

எல்ல:—"அம்புஜம்! கொஞ்சம் பொறு. இங்கு உனக்கே பூரணமான அதிகாரம் இருக்கிறதென்பது எனக்கு இன்னும் நிச்சயமாய் விளங்கவில்லை. இவ்விஷயங்களைப்பற்றி நான் கொஞ்சம் கூறவேண்டியதிருக்கிறது" என்றாள்.

அம்பு:—உண்மையில் எவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொள்வதாயினும் எவ்வளவு செலவாவதாயினும் சிற்றப்பா

வைக் கொன்றவனைக் கண்டுபிடித்தே தீரவேண்டு மென்ற எண்ணம் உனக்கு இருக்குமென்றே நான் நினைக்கிறேன்.

எல்ல:—"நீ செலவைப்பற்றி மிக்க அலட்சியமாய்ப் பேசு கிறாய். அவருடைய மரணசாசனம் வாசிக்கப்படுகிற வரையில், செலவு செய்யக்கூடிய நிலைமையிலிருப்பவர் கள் யார் என்று எப்படித் தெரியும்?" என்றாள்.

அம்புஜம் மிக்க வெறுப்போடு அவளை நோக்கினாள். பிறகு மெதுவாய், "உன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. என் சிற்றப்பாவுடைய ஆஸ்தி யாருக்குச் சேர்ந்தாலும் அவர்கள் அவருக்குச் செய்யவேண்டிய முதற்கடமை இதுவேயாகும்.

அச்சுதம்பிள்ளை, "நான் இரத்னசாமிப் பிள்ளையின் வக்கீ லாக விருப்பதால் அவருடைய மரணசாசனத்தி லிருக்கும் விஷயங்கள் எனக்குத் தெரியும். ஆனால் சவம் அடக்கம் செய்யப்பட்டு அது வாசித்துக் காட்டப்படுவதற்கு முன் நான் அதை வெளியிடலாகாது. எனக்கும் கொஞ்சம் விவ காரங்களிருக்கின்றன; நான் போய்வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

அச்சுதம்பிள்ளை சென்றதே எல்லாம்மாள் அம்பு ஜத்தை நோக்கி, "நான் என் அறைக்குச் செல்கிறேன். நீயும் உன் அறைக்குச் செல். நாளைக்கு நமக்குக் கஷ்டமான வேலை யிருக்கிறது. இந்த மரணவிசாரணை பகிரங்கஸ்தலங் களில்தான் நடைபெறுகிற வழக்கம் என்று நான் கருதி யிருந்தேன்" என்றாள்.

அம்பு:—சில சமயங்களில் அப்படித்தான். இந்தக் கோர னர் விசாரணை ஒருவிதச் சடங்கு. இவர்கள் தங்களுக் குத் தோன்றுகிறவர்களை யெல்லாம் கேள்விகள் கேட்

பார்கள். அதனால்தான் இவரைவிடப் புத்திசாலியான கோரனர் இருந்தால் நலமாகவிருக்கும் என்றேன்.

எல்ல:—அவர் எப்படி யிருந்தாலும் ஒழியட்டும். இந்த விவகாரம் முடிந்தொழிந்தால் போதும். அப்போது நாம் எதிரிலிருக்கவேண்டியது அவசியமோ?

அம்பு—"அவசியமா? சரி சரி. அங்கு நடக்கும் ஒவ்வொருவார்த்தையும் அறியவேண்டும். ஏதேனும் உளவு வெளியாகிறதா வென்று பார்க்கவேண்டும்" என்றாள்.

சற்றுநேரங் கழித்து இருவரும் அவரவர் அறைகளுக்குச் சென்றார்கள். ஆனால் ஒருவருக்கும் நித்திரை பிடிக்கவில்லை. அம்புஜம் தன் அறையில் சாளரத்தினருகில் நாற்காலியில் உட்கார்ந்து தன் சிற்றப்பனை யார் கொன்றிருப்பார்களென்று சிந்தித்துக்கொண் டிருந்தாள். எல்லம்மாள் தன்னைப்பற்றியும் தன் எதிர்கால விவகாரங்களைப்பற்றியும் சிந்தித்துக்கொண் டிருந்தாள். அவள் நல்ல அழகு வாய்ந்தவள். கரிய கூந்தலும் அகன்று செவ்வரிபடர்ந்த பிரகாசம் பொருந்திய கண்களும் கோவைக்கனிபோன்ற அதரங்களும் உடையவள். அவள் கணவன் ஒரு வக்கில். அவன் இறந்தபோது சொல்ப ஆஸ்தியே வைத்தபடியால் அவள் இரத்னசாமிப்பிள்ளையின் வீட்டில் காரியஸ்தி வேலையில் அமர்ந்து கொண்டாள். இரத்னசாமிப்பிள்ளை யவளை மணம்புரிய விரும்பியபோது முதல் அவள் மறுத்து விட்டாள். நல்ல வாலிபமும் அழகுமுடையவனை மணம்புரிய வேண்டுமென்பது அவள் நோக்கம். ஆனால் போகப்போக இரத்தினசாமிப்பிள்ளையின் உதாரகுணத்தையும் அவர் காட்டிய அன்பையும் கண்டு அவரை மணம்புரிவதாய் வாக்களித்தாள். ஆயினும் ஒன்றுமட்டும் உண்மை. அதாவது அவ

ரிடம் திரண்டசெல்வம் இல்லாதிருந்தால் அவள் சம்மதித்திராள்.

அம்புஜம் நெடுநேரம் நித்திரைக்குச் செல்லாமல் உட்கார்ந்திருந்தாள். எந்த விதத்திலாவது உளவுகளைக் கண்டுபிடித்து, கொலையாளியைத் தண்டனையடையச் செய்ய வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். எப்படி கண்டுபிடிப்பது? தனக்குத் தெரியாத விரோதியெவனேனு மிருக்கலாகும். கடைசியில் ஒரு வழி புலப்பட்டது. அதாவது தன் சிறிய தந்தையின் புத்தகசாலையறைக்குச்சென்று அங்குள்ள கடிதங்கள் முதலிய யாவற்றையும் ஆராய்ச்சிசெய்தால் அவற்றிலேதேனும் அகப்படலாகும் என்று தோன்றியது. தான்றான் தன் சிறிய தந்தையின் முக்கியமான வாரிசு என்றும், அந்த வீட்டிலும் அதிலுள்ளவைகளிலும் தனக்கு எப்படியும் சுதந்தரம் இல்லாமற்போகாதென்றும் அவள் அறிவாள். ஆகையால் மேற்கண்ட ஆலோசனை மனதிற்றோன்றியதும் உடனே எழுந்து புத்தகசாலை யறைக்குப் புறப்பட்டாள்.

அவளுடைய எண்ணம் பரிசுத்தமானது. அவள் கருத்தனைத்தும் ஏதேனும் உளவு கண்டுபிடிக்க வேண்டுமென்பதே. அவள் மெதுவாய் நடந்து கீழிறங்கிப் புத்தகசாலையறையின் வாயிற்படியருகிற் சென்றாள். அச்சமயம் உள்ளே யாரோ ஆள் இருக்கும் சந்தடி கேட்டதும் பேசாமல் உற்றுக்கேட்டாள். எல்லம்மாள் டெலிபோனில் பேசும் சத்தம் கேட்டதும் பேசாமல் நின்றாள். அச்சமயம் எல்லம்மாள் டெலிபோனில் பின் கண்டவாறு கூறுகிறாள்:—

"ஆம். அதைப்பற்றி இப்போது பேசாமலிரு...ஆம் ஆம்...நீ எப்படிக் கூறுகிறாயோ அப்படியே செய்கிறேன். ஆனால் இன்றிரவு இங்கே வரவேண்டாம். பார்த்தாயா...

அது ஒரு தென்நாட்டார்....ஆம். நாளைக்கு அதே இடத்தில் அதே வேளைக்கு உன்னைச் சந்திக்கிறேன். வேண்டாம்- என்னை டெலிபோனில் கூப்பிடாதே. எனக்குச் சமையமாயிருக்கும்போது நானே கூப்பிடுகிறேன்” என்றாள்.

டெலிபோன் மூடப்பட்ட சத்தம் கேட்டது. அம்புஜம் ஒரு பக்கம் ஒதுங்கி மறைந்துகொண்டாள். எல்லம்மாளுக்கு அருகில் ஆள் இருக்கும் சமாசாரமே தெரியாது. ஆகையால் அவள் அங்கு மேஜைமேலிருந்த தீபத்தையணைத்து விட்டுப் பூனைபோல் மேல்மாடிக்குச் சென்றாள்.

அம்புஜம் சற்று நேரம் நின்று எல்லம்மாள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு புத்தகசாலையறைக்குள் சென்று கதவைமூடிவிட்டுத் தீபத்தையேற்றி டெலிபோனிடம் சென்று “இப்போது நான் பேசிய டெலிபோன் எண் என்ன கூறு - நான் மறந்து விட்டேன். அதைக் குறிப்பிட்டு வைத்துக்கொள்ள வேண்டும்” என்றாள். அந்த எண் கூறப்பட்டதும் டெலிபோனை மூடிவிட்டுத் தன் அறைக்குச்சென்று அந்த எண்ணைப் புத்தகத்தில் குறிப்பிட்டுக்கொண்டாள். பிறகு சற்று நேரம் சிந்தித்ததும் “எல்லம்மாள் மேல் சந்தேகம் கொள்ளலாகாது. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பத்தில் - நடு இரவில் டெலிபோனில் பேசும் இத்தகைய அபூர்வ சம்பவத்தையாராய்ச்சி செய்தே தீரவேண்டும்” என்று தனக்குத்தானே கூறிவிட்டுப் பிறகு தான் எண்ணிவந்த காரியத்தைச் செய்யத் தொடங்கினாள் - எல்லாம் சோதனை செய்து பார்த்தும் கொலைக்குச் சம்பந்தப்பட்ட உளவை யளிக்கத் தக்க கடிதம் எதுவும் அகப்படவில்லை. கடைசியில் அலுத்துப்போய் மேல்மாடிக்குத் திரும்பினாள்.

அம்புஜம் எல்லம்மாள் அறையினருகிற் செல்லும்போது எல்லம்மாள் மெதுவாய்க் கதவைத் திறந்து எட்டிப்

பார்த்து "ஆ அம்புஜம்! எங்கே இந்நேரத்தில் வெளியில் சென்றாய்?" என்றாள். அம்புஜம் "புத்தகசாலையறைக்கு ஒரு காரியமாய்ச் சென்றிருந்தேன்" என்றாள். "ஓகோ! நமது காரியத்தை யாரேனும் பார்த்து விட்டார்களோ என்று இவளுக்குப் பயமாக இருக்கிறது - அதனாற்றான் பார்த்துக்கொண் டிருக்கிறாள்" என்று அம்புஜம் தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

மறுநாட் காலை அம்புஜமும் எல்லம்மாளும் போஜனம் செய்துகொண் டிருக்கையில் எல்லம்மாள் "வீணாய் மறைத்துப் பேசுவதில் பயனில்லை. நான் உன் சிறியதந்தையை மணம் புரிய இருந்தவரையில் இந்த வீட்டில் கட்டளையிட நானே தலைமையதிகாரத்தை வகித்திருக்கவேண்டியது நியாயம்" என்றாள்.

அம்புஜம் துயரத்தோடு அவளை நோக்கி, "என் உத்தேசங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் விரோதமா யில்லாத வரையில் நீ யதிகாரம் செய்வதில் எனக்கொரு ஆட்சேபனையு மில்லை. ஆனால் இம்மாதிரி நீ நடப்பதை விட நாம் இருவரும் ஒற்றுமையாய் நடந்து கொண்டால் நலமென்று நினைக்கிறேன். ஆயினும் ஒன்றுமட்டும் உன் நினைவிலிருக்க வேண்டும் - அதாவது நீ என் சிறிய தந்தையை மணம்புரிய ஒப்புக்கொண் டிருந்தாலும், இன்னும் நீ அவர் மனைவி யல்ல?" என்றாள்.

எல்ல:—"உண்மையில் அதனால் ஒரு வித்தியாசமுமில்லை. அவர் என்னை மணம்புரிய ஏற்பாடு செய்திருக்கிறவரையில் நான் முன்னமே அவர் மனைவியாய்விட்ட மாதிரி தான். குறைந்தது இவ்வீடு சம்பந்தப்பட்டவரையில்-பின்னால் மரண சாசனத்தைப் பார்த்தால் இது என்னுடையதே யென்பது உண்மையெனத் தெரியும்" என்றாள்.

அம்பு:—"இருக்கட்டும், இருக்கட்டும். அதைப்பற்றிச் சச்சரவு வேண்டாம். இந்த வீடு வேண்டுமென்ற விருப்பம் எனக்கில்லை. என் சிற்றப்பா என்னை யனுதியாய் விட்டு விட்டிருக்க மாட்டாரென்று எனக்குத் தெரியும். எனக்கு அந்தக் கோரனர் சீக்கிரம் வருவானு, இந்த மர்மத்தைப்பற்றி ஏதேனும் உளவுக ளகப்படுமா என்பதே நோக்கம்" என்ருள்.

எல்லம்மாள் "நீ எப்படி இவற்றிலெல்லாம் கலக்கப் பிரியப்படுகிருயோ எனக்குத் தெரியவில்லை. அப்பயங்காமான விசாரணைகளில் தலையிடுவதா?" என்ருள்.

அம்பு:—"அப்படியானல் நீ பேசாமல் உட்கார்ந்திருந்து கொலையாளி தப்பித்துக் கொண்டு போக விட்டு விட வேண்டுமென்கிருயோ ?" என்ருள்.

எல்லம்மாள் "அந்தக் கோரனரோடும் இன்னும் அதைக் காட்டிலும் துப்பறிகிறவர்களோடும் அவதிப்படுவதைவிட பின்னை யென்னசெய்வது?" என்ருள்.

அம்புஜம் கோபத்தோடு என்னமோ கூறப்போனுள். அதற்குள் மணியடிக்கப்பட்டதும் பத்திரிகைக்குச் சமாசாரம் சேகரித்து அனுப்பும் பிஞகபாணி என்பவன் வந்து காணவிரும்புவதாய் வேலைக்காரன் ஒரு சீட்டுக்கொண்டு வந்தான்.

எல்லம்மாள் அச்சீட்டைப்பார்த்துவிட்டு வெறுப்போடு "வேண்டாம் வேண்டாம்; அவனைப்பார்க்கவேண்டாம்" என்ருள்.

அம்பு:—"பேஷ் - கட்டாயம் பார்க்கவேண்டும். அவர்களுக்குச் சரியான சமாசாரம் நாம் கூறுவிட்டால் அவர்கள் பிரியப்படி எதை வேண்டுமாயினும் பத்திரிகையில்

எழுதி விடுவார்கள்" என்று கூறிக்கொண்டே எழுந்து சென்றாள். எல்லம்மாளும் கூடவே சென்றாள்.

பினாகபாணி யென்பவன் அவர்களைக் கண்டதும் "நான் உண்மையில் உங்களுக்குத் தொந்தரை கொடுப்பதற்காக மிக்க விசனிக்கிறேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் ஏன் இந்த வேலையிலமர்ந்தோம் என்றுகூட நான் விசனிப்ப துண்டு. தங்கள் குடும்பத்தைப்பற்றிய துயரமான சங்கதி யைக் கதைபோல் கூறுவதெனில் யாருக்கும் கஷ்டமே. ஆயினும் நாங்கள் எப்படியாவது சமாசாரத்தைச் சேகரம் செய்தே தீரவேண்டும். அன்னியரை விசாரிப்பதைவிட சொந்தக்காரரை விசாரித்தால் சரியான சங்கதி கிடைப் பதோடு, அவர்கள் வெளியிடப் பிரியப்படாத சங்கதிகள் இன்னவை யென்றுணர்ந்து அவற்றை வெளியிடாது விட வும் அனுகூலமாகும்" என்றான்.

அம்புஜம் விடையளிப்பதற்குள் எல்லாம்மாள் "எங் களுக்கு ஒரு சங்கதியும் தெரியாது. நாங்கள் சொல்லக் கூடியது ஒன்று மில்லையே" என்றாள்.

பினாகபாணி பேசாமல் அம்புஜத்தை நேரே பார்த்து "அம்மா நீ நடந்த சங்கதியைக் கூறுவா யென்று நம்புகி றேன். அப்படிக் கூறுவதால் உண்மையை யறிய உளவுகள் கிடைக்கவும் அனுகூலமாகும்" என்றான்.

அம்புஜம் அவன் பேசியமாதிரியாலும் அவன் தோற் றத்தாலும் அவன்மேல் நல்ல அபிப்பிராயம் கொண்டு "ஆம் ஆம்! இன்றேல் நீங்கள் உங்கள் இஷ்டப்படி பிரசுரம் செய்தால் மிக்க ஆபாசமாய் விடும். அதிலும் இத்தகைய விஷயம்" என்றாள்.

எல்ல---"அம்புஜம், குழந்தாய்! நீ இவருடைய கேள் விகளுக்கு விடையளிக்கக் கஷ்டமெடுத்துக்கொள்ளா

மலிருப்பது நலம். உன்மனம் மிகவும் கலங்கிப் போயிருக்கிறது" என்றாள்.

அம்பு:—"இல்லை யில்லை. ஒருவரிடம் பேசக் கூடாத விதமாய் என்மனம் கலங்கிப்போயிருக்கவில்லை" என்று கூறிவிட்டுப் பிநாகபாணியை நோக்கி "நீ தயவுசெய்து என் சிற்றப்பனைக் கொன்றவன் யாரென்று கண்டு பிடிக்கத்தக்க உளவுகளை மட்டும் அறிய உதவி செய்வதாயின் நான் மிக்க நன்றி பாராட்டுவேன். இன்னும் சற்று நேரத்தில் மரணவிசாரணை நடக்கும். அதில் ஏதேனும் சங்கதி வெளி வருமென்று நம்புகிறேன். இப்போது அதைப்பற்றி யெனக் கொன்றுமே விளங்கவில்லை" என்றாள்.

எல்ல:—"அது யாரோ வழிபறிக் கொள்ளைக்காரன் செய்த வேலை. அதிற்சந்தேகமேயில்லை" என்றாள்.

பிநாக:—"அதற்குச் சரியான அத்தாட்சியிருக்கிறதா? சந்தேகமில்லை யென்று கூறிவிட்டால் போதாது. சரியான ருசு வேண்டும்" என்று எல்லம்மாளை உற்று நோக்கிக் கூறினான்.

அம்பு:—நீ கூறுவது சரியே. எங்களுக்கு அவர் அந்த வனத்தில் ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார் என்று மட்டுமே தெரியுமன்றி அவர் ஏன் அத்தோட்டத்திற்குச் சென்றா ரென்றுகூடத் தெரியாது. ஆனால் அதற்குச் சாதாரணமான காரணமிருக்கலாம். அவர் இயற்கை யாராய்ச்சியில் விருப்பமுடையவர். அதற்காக அத்தோட்டத்திற்குச் சென்றிருப்பார்.

பிநாகபாணி:—"இருக்கலாம் இருக்கலாம். ஆயினும் அவர் அதற்கே சென்றாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

அம்பு:—இல்லை யில்லை. அதற்கு மாறாய் அவர் மாலை ஐந்து

மணிக்கே யிங்கு வருவார் என்று எதிர்பார்த்திருந்தோம்.

பிஞக:— அவரைக் கொன்ற ஆயுதம் அகப்பட்டதா?

எல்ல:—இல்லை. போலீஸார் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அம்பு:—உனக்கு இத்தகைய விஷயங்களைப்பற்றி அனுபோகமிருக்கிறது. இப்போதிருக்கும் நிலைமையில் கொலையாளியைக் கண்டுபிடிக்கக் கூடிய உளவு அகப்படுமென்று நினைக்கிருயா?

பிஞக:—"சொல்ல முடியாது. ஒரு சமயம் மாணவிசாரணையில் அனேகம் சங்கதிகள் வெளிவரலாகும்" என்ருன்.

அச்சமயம் வேலையாள் எதற்காகவோ எல்லம்மாளைக் கூப்பிடவும் அவள் சென்ருள். உடனே பிஞகபாணி அம்புஜத்தை நோக்கி "ஏனம்மா? இந்தம்மாள் யார்? உனக்கு ஏன் அவள்மேல் பிரியமில்லை?" என்று துரிதமாய்க் கேட்டான்.

அம்பு:—அவள் வீட்டில் காரியஸ்தியாய் வந்தமர்ந்தாள். என் சிற்றப்பா அவளை வருகிற மாதம் மணம்புரியவிருந்தார். எனக்கு அவள்மேல் பூரணமாய் வெறுப்பில்லை.

பிஞக:—"அவள் தென்ஞட்டாளோ? அப்படித் தெரிகிறது" என்ருன்.

அம்பு:—ஆம். சங்கதி அப்படித்தான். ஏன் அதைப்பற்றி கேட்கிருய்?

பிஞக:—அவள் பார்வை யொருமாதிரி யிருக்கிறது. அவள் தன் வரையில் ஒருவர் உதவியுமின்றிப் பார்த்துக்கொள்ளக்கூடியவள். ஏனம்மா? இந்த விஷயத்தில் நீ உதவியின்றித் தனியாகவே யிருக்கிருயோ?

அம்பு:—ஒரு வழியில் அப்படித்தான். நானும் காரியஸ்தி

யாகிய இவளுமே யிருக்கிறோம். ஆனால் அச்சுதம் பிள்ளை என் சிற்றப்பாவின் வக்கீல். அவர்தான் குடும்பத்தைப்பற்றிய எல்லா விவகாரங்களையும் கவனிப்பவர்.

பிஞக:—சரி. அப்படியாயின் அவர் உதவியில் உனக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிறதாய்த் தெரிகிறது. நான் கூறுவதை அதிகப் பிரசங்கமாய்க் கருதவேண்டாம். இந்த விஷயத்தைக் கண்டு பிடிப்பதில் உனக்கு உதவி வேண்டியதாயின் என்னால் கூடியதை நான் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்.

அம்பு:—என்ன துப்பறிவதிலா?

பிஞக:—ஆம். அதில் எனக்குச் சொற்ப அனுபவமுண்டு. நான் பல இடங்களில் சென்று புழங்குவதால் உன் போன்றவர்களுக்கு மிக்க மர்மமாகத் தோன்றும் விஷயங்களனைத்தும் எனக்கு விளங்கிவிடும். ஆனால் நீங்கள் துப்பறிபவர்களை யமர்த்துவீர்கள். ஆயினும் அதைப்பற்றி இவ்வளவு சீக்கிரமாகப் பேசவேண்டியது அனுவசியம். எதற்கும் உனக்கு இதில் உதவி வேண்டியதாயின் என்னால் கூடியவரையில் செய்வேன்.

அம்பு:—நீ அவ்வளவு செய்தால் நான் மிக்க நன்றியுடையவளாக விருப்பேன். ஆனால் யாவற்றையும் பத்திரிகையில் வெளியிட்டு விடுவீர்களோ?

பிஞக:—இல்லை யில்லை. முக்கியமான தகவல்களை மட்டுமே வெளியிடுவேன். கொலையாளியைக் கண்டு பிடிக்கத் தக்க உளவு அகப்பட்டால் அதை வெளியிடமாட்டேன். இரகசியமாய்ப் போலீஸாருக்கு மட்டும் அறிவிப்பேன். உனக்குப் பிரியமில்லாததை வெளியிடமாட்டேன்.

அம்பு:—என் சிற்றப்பனைக் கொன்றவனை யெப்படியாயினும்

கண்டு பிடித்துத் தண்டனை யடையச் செய்யவேண்டும். என் சிற்றப்பா எனக்குப் போதுமான சொத்தை வைத்திருப்பார் என்று எனக்குத் தெரியும். என் ஆயுள் முழுமையும் இதற்கே உழைத்தாலும் சரி என் சொத்தெல்லாம் இதற்கே செலவழிப்பதாயினும் சரி, அச்சண்டாளனைக் கண்டுபிடித்தே தீர்வேன்.

பிணுக:—"அவ்வளவு உறுதியாய்க் கூறி விடாதே. இக் கொலையாளிகள் அகப்படுவது மிக்க கஷ்டம். ஆயினும் இந்த சந்தர்ப்பத்தில் உன் சிற்றப்பா மிக்க பிரசித்தியான பெரிய மனிதராதலாலும், மிக்க சாமார்த்தியவான்களாகிய துப்பறியும் ஆசாமிகளை யமர்த்தத் தாராளமான பணம் இருப்பதால் அவர்கள் எப்படியேனும் உண்மைக் கொலையாளியைக் கண்டு பிடிப்பார்களென்றே நம்புகிறேன்" என்றான்.

அதற்குள் விசாரணை நடக்கும் வேளை நெருங்கவே ஆட்கள் வந்து சேரத் தொடங்கினார்கள். அவர்கள் சம்பாஷணை நின்றுவிட்டது.

---

## 4-வது அத்தியாயம்.

பிணுகபாணி வாலிபனாக விருந்தாலும் மிக்க சூக்கும புத்தியும் சுறு சுறுப்பு முடையவன். உளவறிவதில் தந்திரமும் உற்சாகமும் அவனுக்கதிகமாயுண்டு. அவன் அம்புஜத்தினிடம் பேசி முடிந்தபின் எல்லம்மாளிடம் பேசி இரண்டொரு வார்த்தைகளைக் கிரகித்துக்கொண்டான். பிறகு வேலைக்காரரிடமும் பேசினான். மிக்க சாமார்த்திய தந்திரமாய் அந்த இரண்டு மாதர்களின் புகைப்படங்களையும் இறந்தவர் படத்தையும் அந்த வீட்டின் படத்தையும் கைப்பற்றிக்கொண்டான். துப்பறிவதில் அவனுக்கு இயற்கையான

உற்சாகமும் ஆசையும் உண்டு. பத்திராதிபர் இந்த விஷயத்தைப்பற்றி யறிவிக்கும் வேலையைத் தனக்கு விட்டது அவனுக்கு மிக்க சந்தோஷம். ஏனெனில் இதில் தன் புத்தி துப்பறியும் வேலை செய்வதற்கு மிக்க இடமிருக்கிறது.

அச்சுதம்பிள்ளை வந்ததும் அம்புஜத்தை விசாரித்தார். அம்புஜம் பிநாகபாணியைப்பற்றிக் கூறி "தன்னிடம் மிக்க சாமார்த்தியவானான வக்கீலிருப்பதாய் பிநாகபாணி கூறினான். ஆனால் இந்த விஷயத்தில் வக்கீல் செய்யவேண்டியதென்ன விருக்கிறது?" என்றாள்.

அச்சு:—இருக்கலாகும். போலீஸார் அனேக விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்களென்று நம்புகிறேன். ஆயினும் அவை யென்னவென்று எனக்கு இன்னும் தெரியாது. என்னாலாகவேண்டிய யாவும் நான் செய்ய ஆயத்தமாகவே யிருக்கிறேன்.

அம்பு:—துப்பறிபவர்களை வைத்து எப்படியாயினும் இதைச் செய்தவனைக் கண்டுபிடிக்க வேண்டும். இதில் தாங்கள் உதவி செய்வீர்களல்லவா?

அச்சு:—ஆம் ஆம். ஆனால் அவசரப்படலாகாது. மரண விசாரணை நடக்கட்டும். அதில் என்ன வெளியாகிறது பார்ப்போம். பிநாகபாணி யார்?

அம்பு—அவன் தினவர்த்தமானி பத்திரிகைக்குச் சமாசாரம் சேகரிப்போன். முதலில் அவனைப்பார்க்க எனக்குப் பிரியமில்லை. பார்த்தது மிக்க சந்தோஷமாயிற்று. இதைப்பற்றி துப்பறிவதில் அவன் எனக்கு உதவி செய்வதாய்க் கூறினான்.

அச்சு:—துப்பறிவதென்றால் அது யார் வேண்டுமாயினும் செய்கிற வேலையல்ல. அதற்குப் பிரத்யேகமான விசேஷ சாமார்த்தியங்கள் வேண்டும். பத்திரிகையாள் கண்டு பிடிப்பது அவர்கள் பத்திரிகையில் வெளியிடுவ

தற்காக. அது எப்போதும் நீதிச்சபைக்கு அத்தாட்சி யாய் வந்து உதவுவதில்லை.

அம்பு:—இவன் அப்படிப்பட்டவன் அல்ல. மிக்க நல்லவன். எனக்குக் கட்டாயம் உதவி செய்வான். மேலும் இவன் என் சிற்றப்பாவின் மைத்துனி புத்திரன்—இப் போது மேற்கு நாட்டில் போயிருக்கிறான் இலக்ஷ்மண சாமி என்பவன் - அவனோடு கல்லூரில் வாசித்தவன். துப்பறிவதில் அவனுக்கு இயற்கையான விருப்பமிருக் கிறது.

அச்சு:—இலக்ஷ்மணசாமி - நீ நேசமாய்......

அம்பு:—சே நேசமா? அவனிடம் இப்போது எவ்வளவு நேசமிருக்கிறதோ அவ்வளவுதான் எப்போதும்.

அச்சு:—அது எவ்வளவு ?

அம்பு:–அவனைப்பார்த்து நெடுநாளாய் விட்டது. அடியோடு மறந்து போய்விட்டேன்.

அச்சமயம் வேலையாளாகிய சுந்தரம் என்பவன் வந்து, "அம்மா! விசாரணை நடக்கப்போகிறது; தங்களைக் கூடத் திற்கு வரச்சொல்கிறார்கள். தங்களுக்கு அங்கு செல்ல விருப் பமோ, மேலே அறைக்குச்செல்ல விருப்பமோ?" என்றான். அம்புஜம், "நான் கோானர் அருகில் உட்காரவேண்டும்; நடக்கிற ஒவ்வொரு விஷயங்களையு மறியவேண்டும்" என்று கூறிவிட்டு அச்சுதம் பிள்ளையை நோக்கி, "ஏன்? செல்ல லாமல்லவா?" என்றாள்.

அச்சுதம்பிள்ளை "இதோ ஒரு நிமிஷத்தில் போவோம்" என்று கூறிவிட்டு சுந்தாத்தை நோக்கி, "சுந்தரம் இரத்தின சாமிப்பிள்ளை கொலையுண்ட விஷயத்தைப்பற்றி யுனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டார். சுந்தரம் திடுக்கிட்டு, "எனக்கா அப்பா! அய்யோ! எனக்கென்ன தெரியும்? ஒன்றுமே தெரியாதே" என்றான்.

அச்சு:—அதென்னமோ உண்மையில் எனக்கொன்றுமே தெரியாது. நேற்று பிற்பகல் நீ எங்கிருந்தாய் ?

சுந்தரம், "நேற்று எனக்கு விடுமுறைநாள். பிற்பகல் முழுதும் வெளியில் சென்றிருந்தேன்" என்றான். அவன் கலவரத்தையும் பீதியையும் கண்ட அச்சுதம்பிள்ளை அன் போடு, "சுந்தரம்! நான் கேட்ட கேள்விகளைப்பற்றி நீ பிர மாதமாக ஒன்றும் எண்ணிக்கொள்ளாதே" என்றார்.

ஆனால் சுந்தரமோ வாய் குளறிக்கொண்டே என் னமோ கூற முயன்று, அடக்கிக்கொண்டு கடைசியில், "அய்யோ! நான் கொல்லவில்லையே" என்றான்.

அச்சுதம்பிள்ளை, "அடே மூடமே! நீ கொன்றதாக யாரும் கருதவில்லை. கோானர் உன்னைக் கூப்பிட்டு விசாரிக் கும்போது இம்மாதிரி கலவரமும் பீதியும் காட்டினால் பல விதமாய் எண்ணிக்கொள்வார்கள். அடக்கமாய்க் கேட்ட கேள்விகளுக்குமட்டும் உண்மையான விடை யளித்து விட் டுப் பேசாமலிரு. தெரிகிறதா நான் கூறுவது?" என்றார்.

சுந்தரம்:—"கோானர் என்ன நினைத்துக் கொள்வார் ?" என்றான்.

"என்ன நினைப்பாரோ எனக்குத் தெரியாது. கூற முடி யாது. நான் உனக்கு எச்சரிக்கை செய்தேன். அவ்வளவே" என்று கூறிவிட்டு, "ஆ! அம்புஜம் அதோ எல்லம்மாளிடம் பேசிக்கொண்டிருக்கிறானே, அவன்றானே நீ கூறிய பினாக பாணி என்பவன்?" என்றார்.

அம்பு—"ஆ! ஆம். அவள் அவனிடம் என்னென்னமோ கூறிக்கொண் டிருக்கிறாள். அவன் புத்தகத்தில் அவ் வளவு துரிதமாக எழுதிக்கொண்டிருக்கிறான் பாரும்" என்றாள்.

அச்சு:—ஆம் அவள் துயரத்தோடு என்னமோ கதை யவ னிடம் கூறிக்கொண் டிருக்கிறாள். அது எப்படியாவது

ஒழியட்டும். உன் வளையில் எப்படி யிருக்கிறாள்? சரி யாய் நடந்துகொள்கிறாளா?

அம்பு:—சரியகவே நடந்துகொள்கிறாள். ஆனால் தானே வீட்டில் தலைமை அதிகாரம் வகிக்கவேண்டு மென்கி றாள்.

அச்சு:—அது தானே பிறகு ஒரு முடிவிற்கு வந்து விடும். ஆனால் நீ இனி இங்கு இருக்கமாட்டாயல்லவா? ஏன் என் அன்பே? என்னிடம் வந்துவிடுவாயல்லவா?

அம்பு:—தயவுசெய்து அதைப்பற்றி இப்போது பேச வேண்டாம்.

அச்சு:—அதற்கல்ல. நீ யினி உனக்கு ஒரு சம்பந்தமுமில் லாத அம்மாதோடு கூடியிருப்பதென்றால் என் மனம் பிடிக்கவில்லை.

அம்பு:—நீர் கூறுவது சரிதான். ஆனால் இப்போது என் மனம் வேறெந்த விஷயத்திலும் செல்லவில்லை

அச்சு:—அது எனக்குத் தெரியும். இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று நீ கோருகிறாயோ அதை மட்டும் கூறிவிட்டால் நான் அவ்வாறே நடக்கச் சித்தமா யிருக்கிறேன்.

அம்பு:—அப்படியாயின் என்னோடுகூட விசாரணை நடக்கிற இடத்திற்கு வந்து என் அருகிலேயேயிரும். அங்கு நடக்கிற விஷயங்களில் எனக்குத் தெரியாத விஷயங் களைக் கூறும். பிறகு போலீஸார் தவறிவிட்டால் நாம் என்ன செய்வதென்பதைப்பற்றி யோசனை செய்ய லாம்.

அச்சு:—போலீஸார் தவறி விடுவார்களென்று உனக்கு எப் படி நிச்சயமாய்த் தெரிகிறது?

அம்பு:—ஏனெனில், இது மிக்க மர்மமான விஷயமா யிருக்

கிறது. மிக்க புத்தி சாமார்த்தியமுடைய துப்பறிபவர்களால்தான் இதைக் கண்டுபிடிக்க முடியும்.

அச்சு:—உனக்கு யார்மேலாயினும் கொஞ்சமேனும் சந்தேகமிருக்கிறதா?

அம்பு:—இல்லை யில்லை. எனக்கு எப்படி யார்மேல் சந்தேகமுண்டாகும்?

அச்சுதம்பிள்ளை மறுபடி கேட்டார். அம்புஜம் முதலில் சற்று தடுமாற்றத்தோடு கூறியபிறகு சிந்திப்பவள்போலிருந்து கடைசியில் இதற்குமேல் ஒன்றும் கூறலாகாதென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டவள்போல், "இல்லை யில்லை எனக்கு ஒருவர் மேலும் சந்தேகம் தோன்றவில்லை" என்றாள்.

அச்சுதம்பிள்ளை ஒரு விநாடி யவளைக் குறிப்பாய் உற்று நோக்கி விட்டு ஒரு குழந்தையைத் தட்டிக்கொடுப்பதுபோல் புன்னகையோடு, "என் அன்பே! இருக்கட்டும் சரிதான், இனி நாம் செல்லலாம் வா" என்றார். உடனே இருவரும் புறப்பட்டு மரணவிசாரணை நடக்கும் கூடத்திற்குச் சென்றார்கள். அக்கூடத்தில் அச்சமயம் கோரனர், ஜூரிகள் யாவரும் வந்து நிறைந்திருந்தார்கள்.

அம்புஜம் எப்போதும் அங்கு அத்தகைய காட்சியைக் கண்டதில்லை. ஆகையால் ஏககாலத்தில் அது ஒரு நியாயஸ்தலம்போல் மாறி யிருப்பதையும், அங்கு குழுமியுள்ள ஜனக்கூட்டத்தையும் கண்டு பிரமித்துவிட்டாள். தான் எங்கு செல்வது எங்கு உட்காருவதென்று அவளுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. கடைசியில் அச்சுதம் பிள்ளையின் கரத்தைப் பற்றிக்கொண்டு அவர் எங்கு அழைத்துப்போய் உட்காரவைத்தாரோ அங்கு உட்கார்ந்தாள். ஆனால் அச்சுதம்பிள்ளை அவளை அவள் முன்பு கூறியபடி கூடிய வரையில் கோரனரின் அருகில் கொண்டுபோய் உட்காரவைத்தார்.

அங்கு வந்திருந்த ஜூரர்கள் விவகாரத்தில் கவனம் செலுத்துபவர்களாய்க் காணப்படினும் அம்மாளிகையின் அலங்காரத்தை யடிக்கடி பார்த்துக்கொண் டிருந்தார்கள். அம்மாளிகை பூர்வீகமான அலங்காரங்களையே யுடையதாக விருந்தது. அம்புஜம் நவீனமாதிரி சாமான்களை வாங்கி வைக்கும்படி எவ்வளவோ வேண்டிக்கொண்டும் இரத்தின சாமிப்பிள்ளை ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டார். நவீன மாதிரியான சாமான்கள் எங்கும் இருக்கின்றன. புராதன சாமான்களே யாவர் பார்வையும் கவர்ந்தன.

கோரனரின் நாட்டமும் மனமும்கூட அம்மாளிகையி னிடமே அதிகமாய்ச் சென்றன. அவர் புதிதாய் அப்பத விக்கு வந்தவர் ஆகையால் அனுபோகமில்லை. சட்டத்தை மட்டும் நன்றாய் வாசித்துக்கொண்டார். தமது அனுபோகக் குறைவைக் கம்பீரமான அதிகாரதோரணையால் மறைக்க முயன்று, "எங்கே போலீஸாருடைய பத்திரம் (ரிபோர்ட்)" என்றார். போலீஸார் குறித்திருந்ததிலும் அவர்களது வைத்தியருடைய அத்தாட்சி பத்திரத்திலும் விசேஷம் ஒன்றுமேயில்லை. சாதாரணமாய் சவம் அகப்பட்டதும் கொலை செய்யப்பட்டிருந்ததுமாகிய சங்கதிகள் மட்டுமே இருந்தன. கோரனர் சாமார்த்தியமாகச் சில கேள்விகளைக் கேட்டும் விசேஷம் ஒன்றும் வெளியாகவில்லை.

கோரனர் வைத்தியரை நோக்கி, "கொலை செய்தவன் வலதுகை பழக்கமுடையவன்றானா?" என்று கேட்டார். வைத்தியர், "அப்படித்தான் தெரிகிறது. ஈட்டி இறந்தவருடைய மார்பின் இடதுபக்கத்தில் குத்தப்பட் டிருந்தது. குத்தியவன் நேராக எதிரிலிருந்து குத்தியிருக்கவேண்டும்" என்றார்.

கோர.—குத்து மேல் நோக்கியிருந்ததா கீழ்நோக்கி யிருந்ததா?

வைத்தி:—இரண்டு மாதிரியுமல்ல, நேராகவே யிருந்தது. ஆயினும் தேகத்தின் மைய பாகத்தை நோக்கிச் சாய்ந்திருந்தது.

கோர:—பிராணன் உடனே நீங்கி யிருக்குமோ?

வைத்தி:—விசேஷமாய் உடனே நீங்கியிராது. ஆனால் காயம்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் மரணம் நேர்ந்திருக்கும்.

குடும்பவைத்தியராகிய பல்லவராயரும் அந்த வைத்தியர் கூறியபடியே கூறினர்.

கோரனர் அவரை நோக்கி, "உமக்குத் தெரிந்தவரையில் இரத்தினசாமிப்பிள்ளை நல்ல சுகதேகியாகத்தானே யிருந்தார்?" என்று கேட்டார்.

வைத்தியர், "அவர் நல்ல சுகமும் தேகபலமும் உடையவர். நான் அவரைப் பலவருடங்களாக அறிவேன். அவர் எப்போதும் மிக்க அசௌக்கியமடைந்ததே யில்லை" என்றார்.

கோர:—அப்படியாயின் அவர் எதிரியைத் தடுத்திருப்பாரல்லவா?

வைத்தி:—சந்தேகமின்றி சச்சரவே நடந்திருக்கிறது. அவரால் கூடியவரையில் தன்னைக் காத்துக்கொள்ள முயன்றிருக்கிறார். ஆயினும் எதிரி அதிக பலவானும் துணிகாமுடையவனுமாக இருந்திருக்கவேண்டும்.

கோர:—அவர் முகத்தில் உண்டாகியிருக்கும் விகாரத்திற்கு என்ன காரணம் நீர் கூறக்கூடும்?

வைத்தியர்:—அவர் திடீலென்று தாக்கப்பட்டதால் திடுக்கிட்டு வியப்பும் கோபமும் அடைந்திருக்கிறார். அதோடு பிராணுவஸ்தைப் பட்டிருக்கிறார்.

கோரனர்:—அவருக்குண்டான முக விகாரம் மரண சமயம்

மனதிற்குண்டான கொடிய வேதனையாயிருக்க லாகுமோ ?

வைத்தி:—ஆகா இருக்கும். மனவியாகூலமும் தேக இம்சையும் தான் அத்தகைய முக விகாரத்தை யுண்டாக்கின.

கோர:—இது முக்கியமான விஷயம். மனவியாகூலம் அச்சமயம் உண்டாயிற்றெனின் அவரைக் கொன்றவன் யார் என்பதை யவர் அறிவார் என்று தெரிகிறது. சாதாரண பீதியாயின் யாரோ கள்ளர் செய்த வேலை யென்று நினைக்கலாகும்.

இதைக்கேட்டதே ஜூரர்கள் ஒகோ விவகாரம் வேறு வழியாய்த் திரும்புகிறதென்று வியப்போடு நோக்கினர்கள்.

அதன் பிறகு அம்புஜம் விசாரிக்கப்பட்டாள். அவள் முதலில் திடுக்கிட்டாலும் கோரனர் எதிரில் சென்று நின்றதும் தைரியத்தோடும் நிதானமாகவும் கேட்ட கேள்விகளுக்கு விடையளித்தாள். அவள் "நீ யார்? எவ்வளவு காலமாய் இங்கிருக்கிருய்?" என்பது முதலிய சாதாரண விஷயங்களைப்பற்றி யெல்லாம் விடை யளித்தபின், கோரனர் அவளை நோக்கி, உன் தாய் தந்தையர் இருக்கிருர்களா? என்ருர்.

அம்பு:—எனக்குப் பத்து வயதாவதற்குள் அவர்கள் இறந்து போனர்கள்.

கோர:—நீதான் இவர் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தியோ?

அம்பு:—அதில் ஒரு பாகத்திற்கு.

கோர:—உன் சிற்றப்பா இறந்த தினம் நடந்த விஷயங்களைப்பற்றி நீ என்ன கூறக்கூடும் ?

அம்பு:—அதிகமாக ஒன்றுமில்லை. அவர் சாதாரணமாய் மாலை ஐந்து மணிக்கு வீட்டிற்கு வருகிறவர். அன்று வாாமற்போகவே எனக்கு மனக்கலக்க முண்டாய்விட்

டது. அதனால் லாயர் அச்சுதம் பிள்ளைக்கு டெலி போன் மூலமாய் சங்கதி யறிவித்தேன்.

கோர:—ஏன் அவருக்கே தெரிவிக்கவேண்டும்?

அம்பு:—அவர் எங்கள் குடும்ப லாயர். அதோடு என் சிற்றப் பாவின் மனமொத்த நண்பர். தொழில் முறைமையில் இருவரும் அடிக்கடி சந்திப்பதுண்டு. ஆகையால் ஒரு சமயம் அவரிடம் சென்றிருப்பார் என்று கருதி அவ ருக்கறிவித்தேன். அவர் தனக்கொன்றும் தெரியா தென்று கூறவே அவரை யுடனே வரும்படி கேட்டுக் கொண்டேன். எனக்கு மிக்க மனக்கலக்கம் உண் டானதால் நம்பகமுடைய ஒருவருடைய உதவி வேண்டியது அவசியமாக விருந்தது.

கோர:—உனது சிற்றப்பன் அன்று அசாதாரணமான உணர்ச்சியோ மனச்சலனமோ ஏதேனும் உடையவ ராக விருந்தாரோ?

அம்பு:—ஒன்றுமேயில்லை. எப்போதும் போல் சுகமாகவும் சந்தோஷமாகவுமே யிருந்தார்.

கோர:—உனக்கு இவ்விஷயத்தில் யார் மேலாயினும் சந் தேகமுண்டா?

அம்பு:—எவர்மேலு மில்லை. ஆனால் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தாலும், என்ன செலவு நேர்ந்தாலும் அவரைக் கொன்றவனைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்பது என்னுடைய தீர்மானம்.

கோர:—"நம்மனைவர்க்கும் அதே எண்ணந்தான்" என்றார்.

அதன் பிறகு இன்னும் இரண்டொரு சாதாரணக் கேள்விகளைக் கேட்டபின் அம்புஜம் விசாரணை முடிந்தது. அதன் பின் எல்லம்மாள் அழைக்கப்பட்டாள்.

கோரனர் தமது பதவியைப்பற்றி மதிப்புடையவரா

யின் எல்லம்மாள் தன் மதிப்பில் அதனிலும் அதிக மதிப்புடையவள்.

கோர:—நீ யிவ் வீட்டின் காரியஸ்தியோ?

எல்ல:—என் நிலைமை யதுதான். ஆனால் நான் இறந்தவரை மணந்துகொள்ள ஏற்பாடாகி யிருந்தது. அவர் இறந்து போகாதிருந்தால் அடுத்தமாதம் இருவரும் மணம் செய்துகொள்ள வேண்டியவர்கள்.

கோர:—நான் கேட்கும் கேள்விக்கு மட்டும் விடைகூறு.

எல்ல:—உமது கேள்விக்கு இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவேண்டியது அவசியமா யிருந்தது.

கோர:—இறந்தவருடைய மரணசாசனத்தில் உனக்கு அனுகூல மிருக்கிறதோ?

எல்ல:—அம்மரணசாசனம் படித்துக் காட்டப்படவில்லை.

கோர:—ஆனால் அதைப்பற்றி யுனக்கொன்றும் தெரியாதோ?

எல்ல:—அவரே கூறியவரையில்தான் தெரியும்.

கோர:—அவர் கூறியதென்ன?

எல்ல:—இந்த வீடும் இதிலுள்ள வஸ்துக்களும், தாராளமான ரொக்கப்பணமும் எனக்கு வைத்திருப்பதாய்க் கூறினார்.

கோர:—நீ அவரை மணம்புரிந்தபின்புமுதலா?

எல்ல:—அவர் மரணத்திற்குப்பின்.

கோர:—அவர் இறந்ததினம் அவரைப்பற்றி நடந்த சங்கதிகளைப்பற்றி இப்போது வெளியானவற்றிலும் அதிகமாக உனக்கு ஏதேனும் தெரியுமோ?

எல்ல:—கொஞ்சம் தெரியும். அதாவது சுமார் இரண்டு மணிக்குத் தாம் சீக்கிரமாகவே வீட்டிற்கு வருவதாகவும் மோடாரில் வெளியில் உலாவப் போவதாகவும் டெலிபோனில் எனக்குக் கூறினார்.

கோர:—அப்படியாயின் அவர் பிற்பகல் ஆரம்பத்திலேயே காரியாலயத்திலிருந்து புறப்பட எண்ணியிருந்தார்?

எல்ல:—ஒரு சமயம் அவர் டெலிபோனில் பேசியது இரண்டு மணிக்குப் பிறகிருக்கலாம். எனக்குச் சரியாய் நினைப்பில்லை. ஆனால் அவர் மூன்று மணி அல்லது நான்கு மணிக்குள் வருவதாய்க் கூறினர்.

கோர:—அவர் அப்படி வாராதபோது உனக்குக் கலவர முண்டாகவில்லையோ?

எல்ல:—இல்லை. அவருக்குப் பல வேலைகளிருப்பதால் திடீலென்று ஏதேனும் புது விவகாரம் நேரிடும். அதனால் அவர் காரியாலயத்திலேயே தாமதித்திருக்கவேண்டியதாக நேரிடும். ஆறு மணிவரையில் அவர் வாராதிருந்த போதுகூட நான் கலக்கமடையவில்லை. யாரேனும் ஏதாவது காரியமாய் அவரை வெளியில் அழைத்துச் சென்றிருப்பார்கள் என்றே கருதியிருந்தேன்.

கோர:—ஆனல் அம்புஜம்மாள் மிக்க கலக்கமடைந்து விட்டதாய்த் தெரிகிறது.

எல்ல:—ஆம்.

கோர:—இந்த விஷயத்தில் உனக்கு யார்மேலேனும் சந்தேகமுண்டாகக் காரணமிருக்கிறதோ?

எல்லம்மாள் கண்களை யுருட்டிக் கோரனரை நோக்கி, "சந்தேகமென்றால் என்ன அர்த்தம்? உம்முடைய கருத்தென்ன?" என்றாள்.

கோர:—அவரை யாரேனும் ஒருவர் கொன்றிருக்கலாம் என்று உன் மனதில் ஐயம் உண்டாகிறதா? வெகுவாய் யார் கொன்றிருக்கலாம்?

எல்ல:—நூறுபேர் கொன்றிருக்கலாம். நான் யாரென்று,

எவர்மேல் சந்தேகம் கொள்வது. அப்படி யொருவரு மில்லை.

அவள் பேசியமாதிரியால் அவள் ஏதோ ஒரு சமாசாரத்தை மறைத்து வைத்துக்கொண் டிருக்கிறாளென்பது மட்டும் புலப்படுகிறது. ஆனால் வெளிக்குத் திறந்த மனதோடு பேசுபவள் போலவே தோன்றினாள்.

கோர:—நேற்றுப்பகல் முழுமையும் நீ வீட்டில் தானே யிருந்தாய் ?

எல்ல:—"ஆம். வீட்டிலேயேதா னிருந்தேன். அவர் சீக்கிரம் வருவாரென்று தெரியுமாதலால் வெளியிற் செல்லவில்லை" என்றாள்.

யாவும் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அம்புஜம், "ஏன் எல்லம்மா! நீ பகல் போஜனம் செய்தபின் ஒரு மணி நேரம் வெளியில் போயிருந்தாயே - நான் கூடத் தபாலில் போடும்படி ஒரு கடிதம் கொடுத்தேனே-மறந்துவிட்டாயோ என்ன?" என்றாள்.

எல்ல:—ஆ! ஆம் ஆம். மறந்துவிட்டேன். அவர் மூன்று மணிக்குமேல்தான் வருவாரென்று தெரியுமாதலால் சற்று நேரம் வெளியில் சென்றிருந்தேன்.

கோர:—எங்கு சென்றிருந்தாய்?

எல்ல:—இன்ன இடத்திற்குச் செல்லவேண்டு மென்று செல்லவில்லை. உலாவிவரலாமென்று அடுத்த இரண்டொரு வீதிகளைச் சுற்றிக்கொண்டு திரும்பி வந்துவிட்டேன்.

அச்சமயம் அவள் சாதாரணமாய்ப் பேசினாளாயினும் அவள் மனதில் அச்சமயம் கலவரமுண்டாயிற் றென்பதும் அதை யவளடக்க விரும்பியும் முடியவில்லை யென்பதும் புலப்பட்டன. அதோடு அச்சமயம் அவள் அம்புஜத்தைப் பார்த்த பார்வையில் மிக்க கோபமும், வெறுப்பும், ஆகட்டும்

உன்னை யொருகை பார்த்துக் கொள்கிறேன் என்று கூறுவதுபோன்ற குறியுமிருந்தன.

கோரனர் அவனை வேறொன்றும் கேட்கப் பிரியப்படாமல், அவனை உற்றுமட்டும் நோக்கிவிட்டு, "நீ போகலாம்" என்றார்.

---

## 5-வது அத்தியாயம்.

### கோரனர் விசாரணையின் தொடர்ச்சி:—

அதன் பிறகு வேலைக்காரனாகிய சுந்தரம் விசாரிக்கப்பட்டான். அவன் கலவரத்தோடு விடை யளிப்பதைக்கண்ட அச்சுதம்பிள்ளை யவனுக்குத் தேறுதல் கூறி,

"நீ யுன் எஜமானுக்குக் கடைசியாக நன்மை புரிய வேண்டுமாயின் இப்போது கலக்கமடையாமல் உன்னால் கூடிய சங்கதிளை வெளியிட்டு அவரைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க உதவிசெய்ய வேண்டும்" என்றார்.

அதன்மேல் சுந்தரம்:—"அப்படியே கூறுகிறேன், அய்யா! எனக்கு அறுபது வயதாகிறது. கடந்த பதினைந்து வருடங்களாக நான் இந்த வீட்டிலிருக்கின்றேன். அப்படி யிருக்க இத்தகைய எஜமானுக்கு இம்மாதிரி ஆபத்து நேர்ந்தபோது எனக்கு மனம் எப்படி நிம்மதியாயிருக்கும். ஆயினும் நான் கூறுவதற் கொன்றுமில்லை. எனக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது" என்றான்.

கோரனர் இவனால் ஒரு பிரயோசனமுமில்லையென்று தீர்மானித்துக்கொண்டு லாயர் அச்சுதம்பிள்ளையை அழைத்து, இறந்தவரைப்பற்றி உமக்கு எவ்வளவு வரையில் தெரியும் என்று கேட்டபோது,

186510

அச்சுதம் பிள்ளை:—"நானும் இரத்தினசாமிப் பிள்ளையும் பாலிய சிநேகம். இருவரும் ஒரே கல்லூரியில் வாசித்தோம். அது முதல் சிநேகமே. துரதிஷ்டமாய் நான் நேற்று இங்கில்லாமற் போய்விட்டேன். இருந்திருந்தால் அவருடைய நடக்கைகளையெல்லாம் கவனித்தேயிருப்பேன். பெரும்பாலும் பிற்பகல் முழுமையும் அவர்கூடவே யிருந்திருப்பேன். ஏனெனில் அவர் விவகாரங்களை நான் கவனிப்பதால் நேற்றுப் பகல் அவருடைய காரியாலயத்திற்குச் சென்றிருப்பேன். ஆனால் திடீலென்று ஒரு வேலை வந்து அதற்காகப் பள்ளூருக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. ஆதலின் மாலைவரையில் வந்து காண முடியாதென்று இரத்தினசாமிப்பிள்ளைக்கு எழுதிவிட்டுச் சென்றேன்; பள்ளூர் சென்றபின் அந்த வேலை யிவருக்குச் சம்பந்தப்பட்டதாதலின் இராத்திரிக்கு வீட்டிற்கு வந்து யாவும் கூறுவதாய்த் தந்தி கொடுத்தேன்" என்றார்.

கோர:—அதன் பிறகு அம்புஜம்மாள் டெலிபோன் மூலமாய்க் கூறினார்களோ ?

அச்சு:—ஆம். உடனே இங்கு வந்தேன். நான் இருக்கும் போது தான் போலீஸார் சங்கதி யறிவித்தார்கள்.

கோர:—சரி; நேற்றைய சங்கதிகளைப்பற்றித் தாங்கள் கூற முடியாத வரையில் இந்த விஷயத்திலுள்ள மர்மம் வெளியாகும் வண்ணம் இறந்தவருடைய விவகாரங்களைப்பற்றி யேதேனும் கூற முடியுமா ? அவருக்கு யாரேனும் எதிரிகளுண்டா? ஏதேனும் சச்சரவு நடந்திருக்குமா ?

அச்சு:—இல்லை யில்லை. அவர் யாரோடும் சண்டையிடவில்லை. அவரைக் கொல்லக் கருதக்கூடிய எதிரியுமொருவருமில்லை. இந்தத் தென்னாட்டு இரகசிய

சங்கங்களைச் சேர்ந்தவர்கள் யாரோ இதைச் செய்திருக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம்.

கோர:—அவர்களேன் அவரைக் கொல்லவேண்டும்?

அச்சு:—கொள்ளை யடிக்க, வேறென்ன? ஈட்டியும் தென்னாட்டானென்றே காட்டுகிறது. ஏனெனில் நமது நாட்டார் இத்தகைய ஆயுதத்தை யுபயோகிப்பதில்லை.

கோர:—அது உண்மையே. மேலும் நமக்குத் தெரியாத விலையுயர்ந்த பொருள்கள் களவு போயிருக்கலாம். ஆனால், அச்சுதம்பிள்ளை! அந்தத் தென்னாட்டாரது இரகசிய சங்கத்தார்கள் அத்தகைய துணிகரச் செயல்களைச் செய்பவர்களென்று தாங்கள் கருதுகிறீர்களா? அவற்றைப்பற்றிக் கூறப்படுகிற சங்கதிகள் அளவு மீறிய வதந்திகளல்லவா ?

அச்சு:—ஆயினும் அவற்றில் அதிக உண்மையுமிருக்கிறது. இந்த நகரில் மட்டும் அவர்கள் ஆறுலட்சம் பெயர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய இரகசிய சங்கங்கள் எங்கும் பரவியிருக்கின்றன. ஆகையால் இன்னொருவர் தூண்டுதலால் கூலிவாங்கிக்கொண்டோ அல்லது களவுசெய்யவோ துணிந்து அவர்களில் ஒருவரோ யிதைச் செய்திருக்கவேண்டு மென்று நான் கருதுகிறேன்.

கோர:—இரத்தினசாமிப்பிள்ளையை அவர் போன்ற சம அந்தஸ்துடைய ஒருவன் கொன்றுவிட எண்ணினால் அத்தகைய ஒருவரைக் கூலிக்கமர்த்துவான் என்பது உண்மையே. அதோடு இச்சங்கதி முதல் முதல் தென்னாட்டா னொருத்தியால் அறிவிக்கப்பட்டதென்பதை நோக்க அவர்களே இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களென்பது புலப்படுகிறது.

அச்சு:—அப்படியாயின் இது கண்டுபிடிக்க மிக்க கஷ்டமான விஷயமாகத் திரும்பி விடும்.

கோர:—நீர் கூறுவதுண்மையே. நமக்குச் சொல்ப உளவுகள் கூட அகப்படவில்லை. இறந்தவரிடமிருந்தகப்பட்ட வஸ்துக்களாலும் ஒரு உளவேனும் வெளிவரக் கூடியதாயில்லை.

அச்சமயம் பத்திரிகைக் காரனாகிய பிநாகபாணி தலை நிமிர்ந்து உட்கார்ந்தான். கோரனர் முன் அப்போது இறந்தவரிடமிருந்த சாமான்கள் யாவும் வைக்கப்பட்டன. யாவரும் அவற்றை யுற்று நோக்கினார்கள். சாதாரணமாய் அவர் போன்ற விவகாரஸ்தரிடம் இருக்கக்கூடிய வஸ்துக்களே யிருந்தன. கடிதங்கள், குறிப்புகள், சிறு புத்தகம், தந்திகள், பென்ஸில், கொத்துச்சாவி, கடியாரம், பணப்பை, மடிப்புக்கத்தறி, இரண்டு கைக்குட்டைகள் இவைகள்யாவும் இருந்தன. ஜூரரில் ஒருவர் "ஏதேனும் விலை மதிப்புள்ள நகைகள் இருந்திருக்கலாம்" என்றார்.

ஆனால் அம்புஜமும் எல்லம்மாளும் அவரிடம் எவ்வித நகைகளுமிருக்க வில்லையென்று கூறிவிட்டார்கள்.

அவற்றிலிருந்த கடிதங்கள் யாவும் வாசித்துப் பார்க்கப்பட்டன. அச்சுதம்பிள்ளை தாம் அனுப்பியதாகக் கூறிய கடிதம் தந்தி இரண்டும்கூட அவற்றிலிருந்தன. தந்தியில் "ப. ஒப்புக்கொண்டான். எல்லாம் நேரில் - இரவு சந்திப்பேன். அச்சுதம்'' என்றிருந்தது. மற்ற கடிதங்களிலும் இந்த விஷயத்தோடு சம்பந்தப் படுத்தத்தக்க சங்கதி யொன்றுமே யில்லை.

பிநாகபாணியின் மனம் சோர்வடைந்து விட்டது. இவற்றி லெல்லாம் ஏதேனும் உளவிருப்பதாய் அவனுக்குப் புலப்படவில்லை. அபிப்பிராய பேதத்தால் விரோதிகள் என்று கருதப்பட்டவர்கள் பெரிய மனிதர்கள். அவர்களைப்பற்றி

நினைப்பதே மூடத்தனம் என்பது அவன் கருத்து. இரகசிய சங்கம் என்று அச்சுதம்பிள்ளை கூறியது அவன் மனதிற்குச் சற்றும் பிடிக்கவேயில்லை. அது கொஞ்சமேனும் வெளிவருகிற சங்கதியல்ல என்பது அவனுக்கு நிச்சயம் - ஏதேனும் புது விஷயம் நேரிடவேண்டும்; உளவும் ஆராய்ச்சியும் வேறு வழியில் திரும்பவேண்டும்; இன்றேல் இதைக் கண்டு பிடிப்பது அசாத்தியமே என்பது அவனுடைய உத்தேசம்.

அச்சமயம் எட்ட விருந்த ஜனக்கூட்டத்தில் சற்று குழப்பமுண்டாயிற்று - யாவரும் அத்திக்கில் நோக்கினர்கள். ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் இரண்டு ஆட்களையழைத்துக்கொண்டு ஜனங்களை விலக்கிக்கொண்டு கோரனர் எதிரில் வந்தான். போலீஸ் உத்தியோகஸ்தன்கூட வந்த இருவர் பருத்த ஆடவன் ஒருவனும், அவன் மனைவியுமாவர். உத்தியோகஸ்தன் கோரனரை நோக்கி "அய்யா! இம்மனிதன்பெயர் குள்ளச்சந்தானம். கூட விருப்பவள் இவனுடைய மனைவி. இவர்கள் கூறும் சரித்திரத்தை நேராகத் தாங்களே கேட்கலாகும்" என்றான்.

போலீஸ் உத்தியோகஸ்தனால் கொண்டு வரப்பட்ட தடித்த மனிதன் மனதில் கலக்கமடைந்து விட்டான். அவனை உட்காரும்படி கூறியபோது அவன் பீதியோடு ஒரு நாற்காலியிற் சாய்ந்து விட்டான். அவன் மனைவியாகிய மாது பொறுமையோடிருந்தாள். ஆனால் தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆடம்பரத்தையும் கம்பீரமான காட்சியையும் கண்டு பிரமிப்படைந்தாள். அவள் அங்கிருந்த படங்களையும், பிரதிமைகளையும், சிலைகளையும் வியப்போடு நோக்கினாள். அம்புஜத்தை அச்சத்தோடு பார்த்தாள்.

கோரனர் அம்மனிதனை நோக்கி, "உன் பெயரென்ன?" என்றார். அதற்கவன், "குள்ளச் சந்தானம்" என்றான். கோரனர், "உன் ஊர் எது?" என்றதற்கு, அவன் "நான் வடநாடு.

ஆனால் இரண்டு வருடமாக இந்திரபுரியில்தான் வசிக்கிறேன்” என்றான்.

கோரனர்:—என்ன வேலை ?

சந்தானம்:—கிணறு சுரங்கம் தோண்டுதல்.

கோர:—சரி. இக்கொலையைப்பற்றி யுனக்கென்ன தெரியும்?

சந்தா:—“நான் கற்பகச்சோலைவழியாய் நேற்று மாலை என் வீட்டிற்குச் சென்றுகொண் டிருந்தேன். அப்போது மரங்கள் நெருங்கியிருந்த ஒரு இடத்தில் யாரோ பிராணவஸ்தைப் படுவதுபோல் சத்தம் கேட்டது. நான் அந்த இடத்திற்குச் சென்றபோது அங்கு ஒரு ஆள் விழுந்துகிடந்ததைக் கண்டேன். உடனே அவர் அருகில் உட்கார்ந்து அவர் சிரத்தைத் தூக்கி நிமிர்த்தினேன். ஆனால் அவர் சிரசைத் தொங்கவிட்டு இரண்டொருவார்த்தைகள் கூறியதும் இறந்து போய்விட்டார்” என்றான்.

கோர:—அவர் இறந்துபோனாரென்பது உனக்கு எப்படித் தெரியும் ?

சந்தா:—நான் அவர் மூக்கைத் தொட்டுப்பார்த்தேன். சுவாசம் வரவில்லை. இருதயத்தைத் தொட்டுப்பார்த்தேன்; அதுவும் துடிக்கவில்லை. அவர் உடைகளில் இரத்தக் கறை யிருந்தது. அதோடு அவர் ஈட்டியால் குத்தப்பட்டாரென்பது நன்றாகத் தெரிந்தது. இத்தென்னாட்டுக் கொலை பாதகரே யதைச் செய்தார்களென்று நினைக்கிறேன்.

கோர:—அதைக்கண்டபின் நீ என்ன செய்தாய் ?

சந்தா:—நான் நேராய் வீட்டிற்கு என் மனைவியிடம் ஓடிவிட்டேன். போலீஸார் நான் கொன்றேனென்று நினைப்பார்கள் என்பதாக எனக்கு மிக்க பீதியுண்டாய் விட்டது.

கோர:—பிறகு அந்த இடத்தில் போலீஸார் வந்ததைக் கண்டாயா?

சந்தா:—ஆம், பார்த்தேன். போலீஸார் வருமட்டும் நான் புதர்களில் ஒளிந்திருந்து பார்த்தேன். எனக்கு எல்லாம் பெரும்பீதியாயிருந்தது.

கோர:—ஓ! அவர் இறந்தபின் போலீஸார் வருந்தனிலும் நீ அங்கு மறைந்து பார்த்துக்கொண் டிருந்தாயோ?

சந்தா:—ஆம். அப்படியிருந்து பார்க்கவேண்டு மென்பது எனக்குத் தோன்றியது. நான் போலீஸார் வருமட்டு மிருந்தேன். பிறகு அவர்கள் வண்டி வருமட்டும் காத்திருந்தார்கள். வண்டி வந்து அதில் சவத்தை யெடுத்துப் போட்டுக்கொண்டு அவர்கள் போகுமட்டும் நான் பார்த்திருந்து உடனே நேராக வீட்டிற் கோடினேன்.

கோரனர் கடுகடுத்த முகத்தோடு, "சரிதான்; நீ இறந்தவரிடமிருந்து என்ன எடுத்துக்கொண்டு போனுய்?" என்று கேட்டார்.

அம்பனிதன் பாபம் முன்னமே பயத்தோடிருந்தவனுதலால் கோரனர் கூறியதைக்கேட்டதே நடுக்கமடைந்தான். அவன் மனமும் தேகமும் நடுங்கிவிட்டன.

அவன் நடுக்கத்தோடு, "நான் ஒன்றையும் எடுக்கவில்லை. இறந்த மனிதனுடைய சவத்திலிருந்து நான் களவாடுகிறவனல்ல. இல்லை. ஒருபோதும் அத்தகைய காரியம் செய்யவேமாட்டேன்" என்றுன்.

கோர:—அப்படியாயின் நீ யந்த இடத்திலிருந்து ஒன்றையுமே யெடுக்கவில்லையோ?

அம்பனிதன் பெரிய குற்றம் செய்தவன்போல் நடுக்கங்கொண்டு விழித்துத் தன் மனைவியை நோக்கினுன். அவள் "ஏன் உண்மையைக் கூறிவிடு" என்றுள்.

சந்தா:—ஒரு புட்டி. ஆனால் ஒன்றுக்கும் உதவாது. ஒரு பால் புட்டி.

கோர:—ஓர் பால் புட்டியா? அப்படியாயின், அது இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டதல்ல?

சந்தா:—நானும் அப்படித்தான் நினைத்து அதைக் கூறவில்லை. ஆனால் என் மனைவி கூறச்சொல்கிறாள். அது ஒரு பால் புட்டி; அதிகமாய்ப் பூமியில் புதையுண்டிருந்தது.

கோர:—அது எப்படி அவ்வாறு புதை யுண்டிருந்தது? வேண்டுமென்றே யங்கு வைக்கப்பட்டதோ?

சந்தா:—"நானும் அப்படியே நினைத்தேன். அதில்...அப்புட்டியில்......" என்று கூறி முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

கோர:—அதில் என்ன இருந்தது?

சந்தா:—அது என்னமோ தெரியவில்லை. அது மிக்க துர்க்கந்தமாக விருந்தது. வெல்லப்பாகு நாற்றம் கூட வந்தது.

கோர—:அப்புட்டி யுன்னிடமிருக்கிறதா?

சந்தா:—அது வீட்டிலிருக்கிறது. என் மனைவி அதைச் சுத்தம் செய்துவிட்டாள்.

கோரனர் அம்மாதை நோக்கி "ஏன் அதைச் சுத்தம் செய்தாய்?" என்று கேட்டார்.

அம்மாது:—"அது பாஷாணம்போலிருந்தது. நல்ல மனிதனைக் கெட்டமனிதன் பாஷாணத்தால் கொன்றுவிட்டான்" என்றாள்.

கோர:—நான் அப்படி நினைக்கவில்லை. இப்புட்டியைப் பற்றிய கதையை நீங்களிருவரும் கட்டிவிட்டீர்கள்; இது சிரிக்கத்தக்க விஷயம்.

அங்கிருந்த ஜூரர்கள் இதைக்கேட்டுக் குழம்ப

மடைந்து விட்டார்கள். சிலர், "இவர்கள் இக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் இதில் சாட்சிகூற இங்கு வருவார்களா?" என்றார்கள். சிலர், "இவர்கள் போலீஸார்களால் கெடுதி நேரிடுமென்று பயந்து தாங்களே வெளிவந்து சாட்சி கூறினால் தங்கள் குற்றத்தை மறைக்கலாமென்று கருதி வந்திருப்பார்கள்" என்று கூறினார்கள். வேறு சிலர், "எதற்கும் இதைப்பற்றிக் கவனிக்கவேண்டும். இவர்கள் மேல் கண்வைக்க வேண்டும்" என்றார்கள்.

கோரனர் கேட்ட கேள்விகளால் அம்மனிதன் மிக்க கலவரமும் பீதியுமடைந்து விட்டான். அவன் மிக்க மனோவேதனை யடைந்தான். அவன் மனைவி மிக்க ஆவலோடு அவன் முகத்தை நோக்கியபடி யிருந்தாள். அவள் எண்ணமெல்லாம் அவன் உண்மையைக் கூறிவிடவேண்டுமென்ற ஒரு நாட்டத்திலேயே யிருந்தது.

ஒருமுறை யவள் அவனருகிற்சென்று அவன் செவியில் என்னமோ கூறினாள். அதற்கு அவன் தலையை மட்டும் அசைத்தான்.

கோரனர் திடீரென்று அவனைச் சோதிக்கவேண்டி, "நீயேன் அம்மனிதனைக் கொன்றாய்?" என்றார்.

அம்மனிதன் கோரனரை உற்று நோக்கி, "நான் அவரைக் கொல்லவில்லை. என்னிடம் துப்பாக்கி யில்லை" என்றான்.

கோர:—அவர் துப்பாக்கியாற் சுடப்படவில்லை; குத்தப்பட்டார்.

சந்தா:—என்னிடம் கத்தி யில்லை. அவர் இறந்தபோது கூறிய வார்த்தைகளை நான் கேட்டேன்.

கோர:—"அவர் என்ன கூறினார்?" என்றார்.

அச்சமயம் யாவரும் நிர்ச்சந்தடியாய்ச் சந்தானம் என்ன கூறப்போகிறானோ வென்று கவனமாகக் கேட்டார்கள்.

சந்தா:—அவர் 'நான் கொல்லப்பட்டேன் - இலக்ஷ்மணன் என்னைக் கொன்றான்-வேணுமென்று செய்த கொலை-' என்று கூறி உடனே இறந்தார்.

அவன் கூறிய அச்சொற்ப வார்த்தைகள் யாவர் மனதிலும் நாராசங் காய்ச்சிவிட்டதுபோல் உறுத்தின. கபடற்ற அவன் வார்த்தை பிரத்தியட்சமாகக் கண்ட உண்மையாகவே யிருக்குமென்று பலர்க்கும் புலப்பட்டது.

அச்சமயம் ஜனக் கூட்டத்திலிருந்து ஒ என்ற கூச்சல் கிளம்பியது. கோரனர் "சந்தடி செய்யவேண்டாம் - இச்சாட்சி கூறியதை யாவரும் கேட்டீர்கள். இவன் வார்த்தைகளை நம்பாதிருக்க ஒரு காரணமுமில்லை. இரத்தினசாமிப் பிள்ளை யொரு சண்டாளத் துரோகியால் கொல்லப்பட்டார் என்பதில் சந்தேகமே யில்லை. வீணாகக் கூச்சலிடுவோர்களை வெளியில் தள்ளி விடும்படி கட்டளையிடுவேன்" என்றார்.

அதன் பிறகு கோரனர் இரத்தினசாமிப் பிள்ளையின் காரியாலயத்தில் டெலிபோன் லிகிதன் வேலை செய்யும் உலகாம்பாள் என்பவளை விசாரித்தார். அம்மாது "நான் அன்று அவருக்காகச் செய்யவேண்டிய வேலையைச் செய்த போது சுமார் இரண்டு மணிக்கு அவர் வெளியில் புறப்பட்டார். போகும்போது உன் வேலை முடிந்ததும் நீ செல்லலாமென்று என்னிடம் கூறினார்" என்றாள்.

அவள் சாட்சியத்தால் இரத்தினசாமிப்பிள்ளை வழக்கமாய்ச் செல்லும் வேளைக்கு முன்பே அன்று காரியாலயத்தை விட்டுச் சென்றார் என்பது மட்டும் தெரிந்ததே யன்றி வேறொன்றும் வெளியாகவில்லை. அதன் பிறகு அக்காரியாலயத்தில் வேலை செய்யும் சிறுவன் விசாரிக்கப்பட்டான்.

கோர:—உன் பெயரென்ன?

வாலிபன்:—உடான் - அல்லது - திருவேங்கடம்.

கோர:—ஏன் உடான் என்று கூறினை?

திருவேங்கடம்:—நான் சாதாரணமாய் அப்படித்தானழைக்கப்படுவேன்.

கோர:—ஏன் ?

திரு:—ஏனெனில் நான் அத்தகைய புளுகன் ஆதலின் அவ்வாறு அழைக்கப்படுகிறேன்.

கோர:—வாலிபனே! இது வேடிக்கையாய்ப் பேசும் இடமல்ல-இங்கு நீ சாட்சி கூற வந்திருக்கிறுய் என்பதை நினை.

வாலி:—ஆம். தெரியும் எனக்கு. நான் இங்கு பொய் கூறுவேனென்று கருதவேண்டாம். ஒரு போதும் கூறேன். இங்கு என்ன காரியமாய் வந்தேனென்பதை நான் அறிவேன்.

கோர:—சரி. நேற்று நடந்த இரத்தினசாமிப் பிள்ளையின் நடவடிக்கைகளைப்பற்றி நீ என்ன அறிவாய்? அவற்றைக் கூறுபார்ப்போம்.

வாலி:—ஒரே மொத்தமாகவா? நேற்று முழுதும் நான் வேலை செய்துகொண்டுதானிருந்தேன்.

கோர:—அவர் நடக்கைகளைப்பற்றி நீ என்ன பார்த்தாய்? என்ன கேட்டாய்? அத்தகைய சங்கதிகளைக் கூறு.

திரு:—ஆ! அனேகம் பார்த்தேன். ஆயினும் ஒரு விஷயம் உங்களுக்குப் பிரியமாக விருக்கலாம். அதாவது நேற்று என் எஜமானரை முற்பகலில் ஒருவன் வந்து கண்டு பேசினுன்.

கோர:—ஒருவன் வந்து பேசினுனு?

திருவேங்:—ஆம் ; அவர்கள் ஏறக்குறையச் சண்டையிட இருந்தார்கள்.

இதைக்கேட்டதே யாவரும் மூச்சுவிடாமல் அவ்விஷயத்தில் கவனத்தைச் செலுத்தினுர்கள். சுமார் பதினறு வயதுடைய சிறுவன் மற்ற சாட்சிகள் யாவரையும்விட அங்

கிருந்த அனைவர்மனதையும் கிரகித்துக்கொண்டான். முன்பு அவன், தான் பெரும் புளுகனென்றும் அதனால் தன்னைப் புரட்டன் என்றுயாவரும் கூறுவார்களென்றும் அவன் வாக்காலேயே கூறியிருக்கிறான். அப்படியிருந்தும் இப்போது அவன் முகத்தில் உண்மையும் சத்தியமும் பிரகாசிப்பது நன்கு விளங்கியது.

கோர:—நடந்த சங்கதியை உன்வாக்காலேயே கூறு.

திருவேங்:—நேற்றுக்காலை ஒரு ஆள் காரியாலயத்திற்கு வந்தான்.

கோர:—என்ன மணி அப்போது?

திருவேங்:—காலை சுமார் பதினொருமணியிருக்கும். போஜன வேளைக்கு ஒருமணி நேரத்திற்குமுன்பு அவன் இரத்தினசாமிப்பிள்ளையைக் காணவேண்டுமென்றான். சாக்குப்போக்குச் சொன்னால் அவன் கேட்கிற மனிதனாகப் புலப்படவில்லை. அதன்மேல் நான் எஜமான் இருக்கும் அறைக்குச்சென்று "அய்யா! வெளியில் ஒரு மனிதன் வந்திருக்கிறான். தங்களைக் காணவேண்டு மென்கிறான்" என்றேன். அவர் சீட்டெங்கே யென்றார். அவன் சீட்டொன்றுங் கொடுக்கவில்லை. தங்களைக் கண்டு பேசவேண்டுமாம் என்றேன். அதற்குள் உயரமான பலம் பொருந்திய அம்மனிதனே அறைக்குள்வந்துவிட்டான். உள்ளே வந்ததும் அவன் எஜமானை நோக்கி "ஓ சிற்றப்பா!" என்று நகைத்துக்கொண்டே கூறினான். எஜமான் வியப்போடு "ஆ! நீயா இலக்ஷ்மணா?" என்று பாதிப் பிரியத்தோடும் பாதி வெறுப்போடும் கேட்டார்.

தடித்த அம்மனிதன் ஆம் என்று கூறிக்கொண்டே தானே அங்கிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்ததும் எஜமான் "என்ன வேண்டும்?" என்றார். அவன் "ஆம்.

கூறுகிறேன் பணம் வேண்டும்” என்றான். எஜமான் அப் படித்தான் நினைத்தேன் எவ்வளவு? என்றார். அம்மனிதன் ஐம்பதினாயிரம் என்றான். எஜமான் காலே வந்தனம் என்றார். அதற்கவன் என்ன க்ஷேமத்துக்காகவா அல்லது போய்வா என்றர்த்தமா? என்று கேட்டான். எஜமான் “போய்வா என்றே, அதுவும்கடைசியாக” என்றார். ஆனால் அம்மனி தன் நான் கூறுவதைக்கேள் என்று எங்கோ மேற்கு தேசத்தில் ஒரு பொற்சுரங்கம் இருப்பதாகவும் அதில் வேலை செய்தால்பெருத்த இலாபம் கிடைக்குமென்றும் பிரமாதமாய் விவரித்துக்கூறி அதற்காகத்தான் இந்த ஐம்ப தாயிரம் டாலர்களும் வேண்டும் என்றான்.

எஜமான் யாவும் பேசாமல் கேட்டுக்கொண் டிருந் தாரே யன்றி வாய்திறக்கவேயில்லை. அவர் முகத்தில் எள்ள ளவு சந்தோஷமாவது ஆவலாவது ஒன்றும் உண்டாக வில்லை. அவர் பேசாமல் தலையசைத்து விட்டார். அவன் மறுபடி கூறினான். வேண்டிக்கொண்டான். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் “இல்லை. இலக்ஷ்மணா! அதே தொகை என் மாண சாசனத்தில் உனக்கு வைத்திருக் கிறேன்; நீ இந்த இந்திரபுரி நகரிலேயே யிருப்பதாயின் அத்தொகையை யுன்னிடமளிப்பேன். ஆனால் அந்த மேற்கு நாட்டில் எங்கோ மண்ணில் கொண்டுபோய் போடுவ தாயின் ஒருபோதும் கொடுக்கமாட்டேன்” என்றார். அவன் என்ன கூறினாலும் அவர் அந்தப் பிடிவாதத்திலேயே யிருந்தார். அம்மனிதனோ வெறி கொண்டவன் போலாய் விட்டான். அதாவது கூச்சலிடவில்லை திட்டவில்லை. ஆனால் தன் ஆஸ்திமுழுமையும் இழந்து விட்டவன்போல் உள்ளே அடக்கொணு மனவெரிச்சலோடு நின்றான். பிறகு வெறுப் போடெழுந்து இரண்டடி சென்று திரும்பி எஜமானை நோக்கி “உமக்குத் தொந்தரை கொடுத்ததற்காக மன்னி

யும். ஆனால் அப்பணத்தை யடைய எனக்கு ஒருவழி தெரி யும். அது கையில் வந்தபின் உமக்கு டெலிபோன் மூலம் அறிவிக்கிறேன்" என்று கூறிவிட்டு வெளியில் சென்றான். ஆனால் தலை நாணியல்ல, ஜெயசீலன்போல் தலை நிமிர்ந்த படி சென்றான்."

சிறுவன் கூறி முடிந்ததும் சற்று நேரம் நிர்ச்சந்தடி யாயிருந்தது. கோரனர் அவன் கூறியவைகளைச் சிந்தை செய்துகொண் டிருந்தார். கடைசியில் அம்மனிதன் பெயர் என்ன என்று கூறினை? என்று கெட்டார். "அவனுடைய முழுப்பெயரும் எனக்குத்தெரியாது; அவர்கள் சம்பாஷணை யில் இலக்ஷ்மணன் என்று மட்டும் தெரிந்தது. பன்முறை யெஜமான் அப்பெயரால் அவனை யழைத்தார்" என்றான் சிறுவன்.

கோரனர் சற்று நேரம் சபையோரை யுற்றுநோக்கி விட்டுப் பிறகு நிதானமாய் "இச்சிறுவன் கூறியவற்றை யாவரும் கேட்டுக்கொண் டிருந்தீர்களல்லவா. இது நம்பத் தக்கதாயிருந்தாலும் நம்பத் தகாததாயிருந்தாலும் எப்படி யிருப்பினும் இதை யாராய்ந்து பார்த்தே தீரவேண்டும். சந்தானம் கூறிய சாட்சியத்தில் இரத்தினசாமிப்பிள்ளை இறந்து போகும் சமயத்தில் இலக்ஷ்மணன் என்பவன் தன் னைக் கொன்றான் என்றும் வேண்டுமென்றே கொன்றானென் றும் கூறினர் என்பதாக வெளியாயிற்று. அவர் கூறியது இதே இலக்ஷ்மணன் என்று அர்த்தமா அல்லது வேறு ஏதேனும் கருத்திருக்குமோ? இப்போது இந்த இலட்சு மணன் என்பவனுடைய முழுப் பெயர் யாருக்கேனும் தெரியுமோ?" என்றார்.

அச்சமயம் அறையின் பின்பாகம் ஜனக்கூட்டத்தில் கிளர்ச்சி யுண்டாயிற்று. மறு நிமிடம் உயரமான பலம்

பொருந்திய ஒரு மனிதன் ஆசனத்தை விட்டெழுந்து கோரனரை நோக்கி வந்தான்.

---

## 6-வது அத்தியாயம்.

### கோரனர் விசாரணைத் தொடர்ச்சி:—

இப்போது கோரனரின் முன் வந்து நின்ற மனிதன் உயரமாய் பருமனும் பலம் பொருந்திய தேகியா யிருந்தான். அவன் நிமிர்ந்தபடி தீரத்தோடு நோய்க் கோரனர் முன் வந்து நின்று, நான்றான் இலக்ஷ்மணன் என்பவன். நான்றான் அவருடைய சகோதரி புத்திரன்" என்றான்.

இதைக் கேட்டதே அங்கிருந்த ஜனங்கள் ஆகாய விமானத்திலிருந்து அவர்கள் மத்தியில் ஒரு வெடி குண்டு விழுந்ததுபோல் இருந்தது. அங்கிருந்த ஒவ்வொருவரும் பிரமித்து அந்த உயரமான மனிதனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். தன் எதிரில் அம்மனிதன் வந்து நின்றதைக் கண்டதே கோரனர் மனமும் தேகமும் ஸ்தம்பித்துப் போனதுபோல் காணப்பட்டார். அவர் உட்கார்ந்தபடி பீதியோடு அம்மனிதனை நோக்கியபடி யிருந்தார். ஆயினும் இரண்டொரு விநாடிக்குள் தமது பழைய நிலைமையை யடைந்து அதிகாரத்தொனியோடு, "நீ தானே இலக்ஷ்மணன் என்பவன்?" என்று வினவினர்.

அம்மனிதன்:—ஆம்.

கோரனர்:—நீ இரத்னசாமிப்பிள்ளையின் சுற்றத்தானே?

இலக்ஷ்மணன்:—சில வருடங்களுக்குமுன் இறந்துபோன அவர் மனைவியின் சகோதரி புத்திரன் நான்.

கோர:—நீ எங்கு வசிப்பது?

இலக்ஷ்:—கடந்த ஐந்து வருடங்களாக நான் மேற்கு நாட்டில் வசித்துக்கொண் டிருந்தேன்.

கோர:—அப்படியாயின் நீ யிங்கு யாரையேனுங் கண்டு போக வந்தாயோ?

இலக்ஷ்:—ஆம் ஒரு சுரங்கத்தை யெடுத்து வேலை செய்வதற்காக என் சிறிய தந்தையைப் பணம் கேட்பதற்காக வந்தேன்.

கோர:—அவர் அதைக்கொடுக்க மறுத்துவிட்டார்?

இலக்ஷ்மணன் ஆம் என்றான். ஆனால் அவனுடைய மாதிரி கோனருக்கு மிக்க கோபமூட்டத்தக்கதா யிருந்தது. அவன் பேசுவது வெளிக்கு ஏதோ களங்கமற்றவன் போல் தோன்றினும் அது கோனரைக் கேலிசெய்வதுபோ லிருந்தது. அம்புஜத்திற்கு அவன் யாரென்று தெரியும். அவள் மிக்க கலவரத்தோடு அவனை நோக்கினாள். ஐந்து வருடங்களுக்குமுன்பு அவளுக்குப் பதினைந்து வயது. அவனுக்கு இருபது வயது. இப்போதவன் ஐந்து வருடங்கள் அதிக வயதானவன்போல் காணப்பட்டான். அவன் முகம் கடினமான தோற்றமுடையதாக விருந்தது. அவன் உருவம் சாதாரணமாகக் காண்போர் பிரியப்படக்கூடியதாகவாவது, அன்னியரின் விருப்பத்தைக் கவர்கூடியதாகவாவது தோன்றவில்லை. அவன் முகத்தில் ஒருவிதப் பெருமையும் தான் என்கிற அகங்காரமும், ஒருவரையும் மதிக்காத அலட்சியபார்வையும் நன்கு புகலப்பட்டன. அவன் கோனர் எதிரில் வந்து நின்று அலட்சியமாய்க் காங்களைப் பின்னால் கட்டிக்கொண்டு, "நீயாவது வேறு யாராவது என்னை என்ன செய்யமுடியும்?" என்று கேட்பது போன்ற பார்வையோடு அவரைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

கோரனரின் பிரமை யொருதரம் நீங்கியதும் அவர் சாசா வென்று தமது கேள்விகளை விடத்தொடங்கி,

"நல்லது, நேற்று நீ யெங்கு சென்றாய் என்ன காரியங் களைச் செய்தாய் என்பது முதலிய உன் நடக்கைகளைப்பற்றி கூறு" என்றார்.

இலக்ஷ்:—ஆகா; கூறுகிறேன். என் சிறிய தந்தையின் காரியாலயத்திலிருக்கும் திருவேங்கடம் என்ற சிறு வன் இப்போது கூறினனே அவையாவும் உண்மையே. நான் மேற்கு நாட்டிலிருந்து முந்தாம் நாள் தான் இந் திரபுரிக்கு வந்தேன். நேற்றுக் காலை என் சிற்றப்பா வைக் காணச் சென்றேன். எனக்கு வேண்டிய தொகையை யளிக்கும்படி யவரைக் கேட்டேன். அவர் அளிக்க மறுத்துவிட்டார். பிறகு நான் போய்விட் டேன்.

கோர:—எங்கு சென்றாய் ?

இலக்ஷ்:—நகரக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு கடைசி யில் நான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குச் சென் றேன்.

கோர:—அதற்கப்புறம் ?

அப்போது இலக்ஷ்மணனுடைய தைரியம் அவனைக் கைவிட்டது போல் தோன்றியது. அவன் "அப்புறமா?" என்று கூறிவிட்டுத் திகைத்து நின்றான். பிறகு தன் காலை மாற்றி நின்று பின்பக்க மிருந்த கரங்களை யெடுத்து முன் பக்கம் சட்டைச் சேபிகளில் நுழைத்துக்கொண்டு கலவர மடைந்தவன் போல் நின்றான். மறு விநாடி அவன் பார்வை அம்புஜத்தின் மேல் விழ்ந்தது. அம்புஜம் ஆவலோடும் கலக் கத்தோடும் அவனையே நோக்கியபடி யிருந்தாள்.

கோர:—"உம் அப்புறம்" என்றார்.

இலக்ஷ்:—"அப்புறம் சிற்றுண்டி யருந்தி உலவுவதற்காகக் கற்பகச் சோலைக்குச் சென்றேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே யாவரும் பெருமூச்செறிந்தார்கள். இது நிரபராதியின் களங்கமற்ற மொழிகளா அல்லது துணிகரமான குற்றவாளி அலட்சியமாகத் தன் குற்றத்தைத் தானே யொப்புக்கொள்ளும் மொழிகளா என்று யாவரும் கலக்கமடைந்து விட்டார்கள்.

அச்சுதம்பிள்ளை யொருவிதமாய் இலக்ஷ்மணனை யுற்று நோக்கினார். அவர் அனுபவத்தால் மனிதருடைய தோற்றத்தாலேயே அவர்களின் உண்மையை யுணர்ந்து கொள்ளக் கூடியவர். இந்த இலக்ஷ்மணன் விஷயத்தை யின்னதென்றறிந்து கொள்ளக்கூடாமல் அவர் திகைப்புற்றார். அவர் உள்ளத்தில் அவன்மேல் நல்ல அபிப்பிராயமே யுண்டாயிற்று. ஆயினும் இப்போதே எதையும் தீர்மானித்துவிடலாகாதென்று பொறுமையோ டிருந்தார்.

அம்புஜம் அவன் மொழிகளைக் கேட்டதே, அவள் முகம் வெளுத்துவிட்டது. அவளுக்குத் தெரிந்தவரையில் அவன் இத்தகைய குற்றத்தைச் செய்திருப்பானென்று கருதக்கூடவில்லை. இருவரும் சிறுவர்களாக விருந்த போதே அவன் தனக்குத் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்த சந்தர்ப்பங்களில் கூட தன் குற்றத்தை மறைக்கப் பொய் கூறாமல் உண்மையே கூறுவது வழக்கம் என்பதை அவள் நன்கறிவாள். இவன் இவ்வளவு கூறியபடியால் இப்போதும் அப்படியே தன் குற்றத்தை யொப்புக்கொள்ளும் நோக்கத்தோடேயே யிப்படிக் கூறினனோ என்று அவளுக்குப் பெருஞ் சந்தேகமும் மனக்கலக்கமும் உண்டாயின. ஆயினும் இவன் தன் சிறிய தந்தையைக் கொன்றான் என்பதை நினைக்கும்போது அவள் மனம் அதை

யொப்பவில்லை. இதனால் அவள் மிக்க கலக்கத்தில் அவஸ்தைப்பட்டாள்.

கோர:—இலக்ஷ்மணன்! நீ கூறிய சங்கதி ஏறக்குறைய உன் மேல் நீயே குற்றம் சாட்டுவதாகும். நேற்று மாலை கற்பகச்சோலை யென்ற விடத்தில் உன் சிறிய தந்தை கொலை செய்யப்பட்டார் என்ற சங்கதி யுனக்குத் தெரியுமா?

இலக்ஷ்:—ஆம்.

கோர:—நீ எந்த வேளையில் அங்கு உலவச்சென்றிருந்தாய்?

இலக்ஷ்:—எந்த வேளைக்கோ சரியாய்த் தெரியாது. ஆனால் சூரியாஸ்தமனத்திற்கு முன் வீட்டிற்குத் திரும்பிவிட்டேன்.

கோர:—நீ அத்திக்கே ஏன் சென்றாய்?

இலக்ஷ்:—ஏனெனில் காலையில் என் சிற்றப்பாவிடம் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் அவர் கற்பகச்சோலையில் நல்ல பந்தாட்டம் நடக்கிறதென்று கூறினார். அதைப் பார்க்கலாமென்று சென்றேன். அதோடு நான் செய்யவேண்டிய வேலையும் ஒன்றுமில்லாதிருந்தது.

கோர:—நீ ஏன் அம்புஜம்மாளைக் காணச் செல்லவில்லை?

இலக்ஷ்மணன் கோரனரை யுற்று நோக்கி "தாங்கள் தங்கள் எல்லைக்குப் புறம்பான விஷயங்களைப்பற்றிக் கேட்கிறீர்கள். என் குடும்ப விவகாரங்களைப்பற்றித் தங்களுக்காக வேண்டிய தொன்றுமில்லை. தங்களுக்கு வேண்டிய விஷயத்தைப்பற்றிக் கேளுங்கள்; என் சிற்றப்பாவை நான் கொன்றதாகச் சந்தேகிக்கிறீர்களோ?" என்றான்.

கோர:—அது ஒரே முடிவாய்க் கூறிவிடுகிற விஷயம். நீ எவ்வளவு வரையில் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்பதை யறிய வேண்டும்.

இலக்ஷ்:—அப்படியானால் என்ன கேள்வி கேட்கிறீர்களோ

கேளுங்கள்-தயவு செய்து என் சொந்தக் குடும்ப விஷயங்களைப்பற்றிக் கேட்காதீர்கள் என்று மட்டும் கூறுகிறேன்.

இலக்ஷ்மணனுடைய மாதிரி யாருக்கும் பிடிக்கவில்லை. அவன் எதையும் சட்டை செய்யாதவன் போலவும், கவனிக்காதவன் போலவும், நம்மேல் கொலைக்குற்றம் சாட்டப்படும் போல் காண்கிறதேயென்று கொஞ்சமேனும் மனங்கலங்காதவன் போலவும் காணப்பட்டான். நடந்த குற்றத்தின் உண்மை விஷயங்களைக் கண்டு பிடிக்க விரும்புவோர்க்கு அவன் முரட்டுத்தனமாகவும் எதையும் அலட்சியமாகவும் பேசுவதால் மிக்க வெறுப்புண்டாயிற்று. அனேகர், "சந்தானம் என்பவன் கூறிய அத்தாட்சியில் இறந்தவர் இலக்ஷ்மணன் கொன்ருன் என்று கூறியதாகச் சொன்னது இந்த மனிதனைப்பற்றித்தா னிருக்கவேண்டும். இவன் வெளித்தோற்றமாய்த் தோன்றக்கூடிய விஷயங்களை மட்டும் நாமே கூறிவிட்டால் நாம் குற்றம் செய்யாததால் தான் அப்படிக் கூறுகிருேமென்று இங்குள்ளோர் கருதுவார்கள். கடைசியில் நாம் செய்யவில்லை யென்று உடாய்த்துவிடலாமென்று கருதியே யிப்படிக் கூறுகிருன்" என்று கருதினர்கள்.

கோரனர் இலக்ஷ்மணனை நோக்கி, "சரி நீ கூறியபடியே முக்கியமான விஷயத்தைப்பற்றி மட்டுமே பேசுவோம். நீ நேற்று அத்தோட்டத்தி லிருக்கையில் அங்கு இரத்தினசாமிப்பிள்ளையைக் கண்டாயா?" என்று கேட்டார்.

இலக்ஷ்:—நான் காணவில்லை.

அவன் கூறியமாதிரி மிக்க அசட்டைத்தனமாய் அதைப்பற்றி எனக்கென்ன அவசியம் என்பதுபோ லிருந்ததால் கோரனர் திடுக்கிட்டு "நீ யதை ருசு செய்ய முடியுமா?" என்று அவனைக் கேட்டார். இலக்ஷ்மணன் வியப்போடு கோரனரை யுற்று நோக்கி, " ஒருகாலும் முடியாது.

நான் அதை ருசுப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. ருசு செய்யவேண்டிய பொறுப்பனைத்தும் தங்கள்மேல்தானிருக்கிறது. நான் இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றதாக என்மேல் தாங்கள் சந்தேகங்கொண்டால் அதற்குத் தக்க ருசு காட்டவேண்டிய கடமை தங்களுடையதே" என்றான்.

கோரனர் திகைத்து விட்டார். அவர் ஒரு போதும் இப்படிப்பட்ட சாட்சியைக் கண்டதேயில்லை. இப்போது இதற்குமேல் இவன் விஷயத்தில் எப்படி நடந்துகொள்வதென்பது அவருக்குப் புலப்படவில்லை.

ஆயினும் இலக்ஷ்மணனுடைய வார்த்தையிலும் நடக்கையிலும், மரியாதையும் நேர்மையுமே யிருப்பதாய்ப் புலப்பட்டதன்றி, அதிருப்திக்கு இன்னதுதான் இருக்கின்றதென்று சரியாக விளங்கவில்லை, எனினும் ஏதோ மர்மம் இருக்கிறதென்றுமட்டும் தோன்றியது. அவனே வேண்டுமென்று இப்போது நடக்கும் விஷயத்திற்கும் தனக்கும் உள்ள சம்பந்தத்தை மறுப்பதற்காகவே அவ்வாறு நடக்கிறானென்பதும் அவன் பிரியப்பட்டால் வேறு விதமாய் நடக்கலாகுமென்பதும் தோன்றின.

கோரனர் கலவரத்தோடு இந்த விஷயங்களையெல்லாம் தமக்குள் ஆராய்ந்து கடைசியில் பிரத்தியட்சமாய்க் கிடைத்திருக்கும் அத்தாக்ஷிகளைக்கொண்டு விஷயத்தை முடிப்பதென்று கருதினார். அதற்கு அத்தாட்சிகள் கிடைக்காமற் போகவில்லை. சட்டமுணர்ந்த மனதிற்கு இருக்கும் ருசுக்கள் தீர்மானமானவைகளாகவே தெரிகின்றன. கொலை நடந்ததற்கு நேரான சாட்சியில்லை. ஆனால் கொலை செய்கிறவர்களெல்லாம் எதிரில் சாக்ஷி வைத்துக்கொண்டு செய்வதில்லை.

கடைசியில் கோரனர் இலக்ஷ்மணனை நோக்கி "இலக்ஷ்

மணன்! இப்போது ஏறப்பட்ட சாட்சியங்களால் நீ நேற்றுக் காலை இரத்தினசாமிப்பிள்ளையின் காரியலாயத்திற்குச் சென்றிருந்தாயென்பதும் அவரை ஐம்பதினுயிரம் டாலர் கேட்டாயென்பதும் தெரிகின்றன. அவர் கொடுக்கக் மறுத்து விட்டார். நீ கோபத்தோடு அவரை விட்டுச் சென்றாய். மேலும் வேறு வழியில் அப்பணத்தைபடைய எனக்குத் தெரியும் என்று கூறினாய். அதேமாலை அவர் கொல்லப்பட் டிருக்கிறார். அவர் கற்பகச் சோலையில் கொல்லப்பட்டிருக்கிறார். நீயும் அங்கு சென்றிருந்ததாக ஒப்புக்கொள்கிறாய். சந்தானம் என்பவன் கூறியசாக்ஷியத்தால் இரத்தினசாமிப் பிள்ளை மாணமடையும் சமயத்தில் தன்னை இலக்ஷ்மணன் கொன்றான் என்றும் வேண்டுமென்றே கொலை செய்தானென்றும் கூறி இறந்ததாகத் தெரிகிறது. இவற்றால் தீர்மானமாக ஏற்படுகிற அபிப்பிராயத்திற்கு நீ என்ன பதில் கூறுகிறாய்?" என்றார்.

யாவரும் நிர்ச் சந்தடியாய் மிக்க ஆவலுடன் இலக்ஷ்மணன் முகத்தையே நோக்கினார்கள். இலட்சுமணன், "அவர் இலக்ஷ்மணன் கொன்றான் என்றதாலேயே நான்றான் கொன்றேன் என்று அவர் கூறியதாய் எப்படிக் கருதலாகும். பெயர் அகப்பட்டதாலேயே யென்னையே சொன்னதாய் முடிந்துவிடாது. இலக்ஷ்மணன் என்றபெயர் எனக்கு மட்டுமே யுரித்தானதாகாது. எத்தனையோ பேர் அப்பெயருடையோர் இருக்கலாம்" என்றான்.

இப்போது அவன் முன்னிலும் நிதானமாகவும் உறுதியாகவும் பேசினான். ஆயினும் அதனாலேயே யொருவர்க்கும் அவன் மேல் நல்ல அபிப்பிராய முண்டாகவில்லை. அவனுடைய அகங்காரத் தன்மையால் யாவர்க்கும் அவன் குற்றத்தை மறைக்கக் கருதியே யிம்மாதிரி பேசுகிறானென்றே எண்ணினார்கள்.

கோரனர் மிக்க கஷ்டத்தோடு கிளறிக் கிளறிக் கேட்டார். அதனால் அவன், தான் இரத்தினசாமிப்பிள்ளையிடம் சென்று பணம் கேட்டதாகவும், அவர் கொடுக்க மறுத்து விட்டதாகவும், தான் கோபத்தோடு அவரை விட்டுப்பிரிந்து சென்றதாகவும், தானே ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப்பட்டான். அதோடு தான் அப்பணத்தை யடைய வேறு வழி யிருக்கிறதென்று கூறியதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

கோர:—நீ அப்பணத்தைப் பெற்றாயா ?

இலக்ஷ்:—இல்லை.

கோர:—அதை யெங்கு கைபற்றக் கருதினாய் ?

இலக்ஷ்:—அதைக்கூற மறுக்கின்றேன்.

கோர:—"இலக்ஷ்மணா! நீ நடந்துகொள்ளும் மாதிரி உனக்கு அனுகூலமானதாக இல்லை. ஆயினும் அது முக்கியமான விஷயமல்ல. நான் உன் மேல் சாட்டிய குற்றங்களுக்கு நீ சரியான சமாதானம் கூற வில்லை. அதுவுமன்றி உனக்கு விரோதமாக வேறு அத்தாட்சிகளுமிருப்பதாய் நான் அறிகிறேன். ஓ சந்தானம்! இங்கே வா!" என்றார்.

முன்பு சாக்ஷிகூறிய அம்மனிதன் உடனே வந்து கோரனர் முன் நின்றான்.

கோர:—இதோ நிற்கும் இலக்ஷ்மணன் என்ற இம் மனிதனைப் பார். இவனை நேற்றுக் கற்பகச்சோலையில் நீ பார்த்தாயா ?

சந்தா:—நான் பார்த்ததாகவே நினைக்கிறேன்.

கோர:—மரணம் நடந்த இடத்திற்குச் சமீபத்தில் பார்த்தாயா ?

சந்தா:—அப்படித்தான் நினைக்கிறேன்.

அச்சமயம், "நீ பொய் சொல்லுகிறாய்" என்று தீர

மான ஒரு உரத்தசத்தம் கிளம்பியதும் இரத்தினசாமிப் பிள்ளையின் காரியாலயத்தில் வேலை செய்பவனும் முன்பு சாக்ஷி கூறியவனுமாகிய புரட்டன் திருவேங்கடம் என்றவன் எழுந்து சந்தானம் என்ற சாட்சியின் அருகில் வந்து நின்று,

"சந்தானம்! உனக்குக் கற்றுக்கொடுத்த படியே நீ கூறுகிறாயல்லவா?" என்றான்.

சந்தா:—"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றான்.

திருவேங்கடம் சந்தோஷத்தோடு, "ஆ! பேஷ்" என்றதும் கோானரை நோக்கி, "தயவு செய்து சற்று பொறுங்கள்" என்று கூறித் தன் ஜேபியிலிருந்த ஒரு கால் ரூபாயை யெடுத்து அவனிடமளித்து, "சந்தானம்! அதை நன்றாய்ப்பார்" என்றான். சந்தானம் நன்றாய்ப் பார்த்தான். சிறுவன், "அதை முழுமையும் நன்றாய்த் திருப்பித் திருப்பிப் பார்" என்று மீண்டும் அதை வாங்கிக் கொண்டு, "நன்றாய்ப் பார்த்தாயா?" என்றான். சந்தானம் "பார்த்தேன்" என்றான். திருவேங்கடம், "நல்லது; மறுபடி பார். நன்றாய்ப்பார்" என்று திருப்பி அதை யவனிடமளித்தான். அவன் திருப்பித் திருப்பிப்பார்த்து, "பார்த்தேன். நன்றாய்ப் பார்த்தேன்" என்றான். திருவேங்கடம் அதை வாங்கிக்கொண்டு மறுபடி "நன்றாய்ப் பார்த்தாயா? எள்ளளவும் சந்தேகமில்லையே?" யென்று கேட்டான். சந்தானம், "இல்லை நன்றாய்ப் பார்த்தேன்" என்றான்.

அதன்மேல் சிறுவன்:—"சரிதான்; சந்தானம்! இப்போது இந்தக் கால் ரூபாயிலிருக்கிற தொண்டி இதில் வருடம் போட்டிருக்கிற இடத்திற்கு மேலே யிருக்கிறதா? கீழே இருக்கிறதா கூறுப் பார்ப்போம்" என்றான்.

சந்தானம் சற்று நேரம் சிந்தித்து "ஆ! அத்தொண்டி வருடம் இருக்கிற இடத்திற்குமேலே யிருக்கிறது" என்றான்.

திருவேங்கடம் "நன்றாய் யோசித்துப்பார்; கவனமாய்ச் சிந்தித்துச் சரியாய்க்கூறு" என்றான்.

சந்தா:—"ஆகா - சரியாகவே கூறுகிறேன். வருடத்திற்கு மேலேயே யிருக்கிறது" என்றான்.

திருவேங்கடம் உடனே அந்தக் கால் ரூபாயைக் கோரனரிடமளித்து "தாங்களே பாருங்கள்; இக்கால் ரூபாயில் தொண்டியேயில்லை" என்றான்.

உண்மையில் அதில் எங்கும் துவாரமேயில்லை.

இக்காட்சியைக் கண்ட கோரனரும் அங்கிருந்த அனைவரும் மிக்க வியப்பும் பிரமையுடைந்து சிறுவனை யுற்று நோக்கினார்கள்.

கோரனர் அச்சிறுவனுடைய புத்தி சாமார்த்தியத்திற்கு மிக்க வியப்படைந்து, "திருவேங்கடம்! இப்போது நீ நிரூபித்த விவகாரத்தின் தாற்பரியம் என்ன?" என்றார்.

திரு:—"இத்தகைய மந்தனுடைய சாட்சியம் ஒரு மனிதனுக்கு மாரணதண்டனை யளிக்கத்தக்க கொலைக் குற்றத்தில் சாட்சியாக ஏற்றுக்கொள்ளத்தகாதது என்பதே" என்றான்.

திருவேங்கிடத்தின் புத்தி நுட்பத்தையறிந்த அங்கிருந்த ஜனங்கள் சொல்லொணு வியப்பும் அச்சிறுவன் விஷயத்தில் மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

---

## 7-வது அத்தியாயம்.

### கோரனர் விசாரணைத் தொடர்ச்சி:—

திருவேங்கிடம் நிரூபித்த விவகாரத்தால் சந்தானத்தின் சாட்சியம் சற்றும் நம்பத்தக்கதல்ல வென்று அடியோடு நிராகரிக்கப்பட்டது.

கோரனர் ருசுக்களைப்பற்றிய விவகாரத்தைப் புத்தகத்

தில் பார்த்திருக்கிருர் - இப்போது அனுபவமாய்க் கண்டதால் அவருக்கு மிக்க வியப்புண்டாய் விட்டது. அச்சுதம் பிள்ளை திருவேங்கிடத்தை யுற்று நோக்கி "ஆ! இச்சிறுவனுக்கு உயர்தரமான மூளையிருக்கிறது. இவன் இப்போதிருப்பதைக் காட்டிலும் மிக்க மேலான நிலைமையில் இருக்கவேண்டியவன்" என்று எண்ணிக்கொண்டார். அம்புஜமும் அவன் விஷயத்தைப்பற்றி மனதில் குறித்துக் கொண்டாள். இலக்ஷ்மணனும் பகிரங்கமாய் புன்னகை புரிந்தான்.

ஆனல் இத்தனை பேர்க்கும் மிக்க வியப்பை யுண்டாக்கிய அச்சிறுவன் எவ்விதப் பெருமையாவது மகிழ்ச்சியாவது அடையவில்லை. தான் அத்தனை மனிதர்களின் மனதைக் கவர்ந்ததாய் அவன் மகிழ்ச்சி யடைவில்லை. அவன் வரையில் அவனுக்கு உண்மை யொன்றுமே தெரியாது. அப்போதுண்டான - திடீலென்றுண்டான அலோசனையால் அவ்வாறு செய்தான்.

அவன் ஆலோசனை யென்னவெனில், "இந்த சந்தானம் என்பவன் உண்மையில் இலக்ஷ்மணனை கற்பகச்சோலையில் கண்டிருந்ததாயின் முன்னமே, முதலில் இவன் சாக்ஷி கூறியபோதே தான் ஒரு மனிதனை யங்கு கண்டதாகக் கூறியிருக்கவேண்டும். போலீஸார் இலக்ஷ்மணன்மேல் இருக்கும் வெளித்தோற்றமான அத்தாக்ஷிகளால் அவன் மேல் சந்தேகங் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இவ்வாறு கூறும்படி யிவனைத் தூண்டியிருக்கலாம். மேலும் இவன் தன்மனைவியின் பேச்சின்படி சாக்ஷிகூறவந்தான் என்று தெரிகிறது. இப்படிப்பட்டவன் அன்னியர் தூண்டுதலாலேயே இலக்ஷ்மணனை யிங்கு கண்டபின் இவ்வாறு கூறுகிருன்" என்று அவன் புத்தியிற் பட்டது. முதலில் அவன் நீ உனக்குச் சொல்லிக்கொடுத்தமாதிரி நீ கூறுகிருய் என்று அவனைக்

கேட்டது உத்தேசமே. அதை யவன் ஒப்புக்கொண்டதே மற்ற யாவும் நம் முத்தேசப்படித்தான் நடந்திருக்கிற தென்று அவனுக்கு நிச்சயமாய் விட்டது.

கோரனருக்கு இச்சிறுவன் நடக்கையால் தமது மதிப் புக் குறைந்துவிட்டதுபோல் தோன்றியது. அதனால் அவர் அதைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டு மென்ற நோக்கத்தோடு "ஆனால் ஒரு சாக்ஷியின் வாக்கு மூலத்தை மெய்யென்றும் அல்லவென்றும் தீர்மானிப்பது ஜூரர்களைப் பொறுத்தது. இம்மாதிரி ஆராய்ச்சிகளைப் பற்றியும், ஒரு மனிதனுடைய புத்தியளவைப்பற்றிய விவகாரத்தையும் நான் நன்கறிவேன் ஆனால் இத்தகைய விஷயங்கள் அநு பவத்தில் பயன் படுவதில்லை யென்றே கருதுகிறேன்" என்றார்.

அச்சுதம்பிள்ளை:—ஓ! நான் அவ்வாறு கருதவில்லை. இது புத்தி சூக்குமத்தைப் பொறுத்த விஷயமே யாகும்.

கோரனர்:—திருவேங்கிடம்! நீ எப்போதும் யாவற்றையும் நன்றாய்ப் பார்க்கிறாயா?

திருவேங்கிடம்:—இது நன்றாய்ப் பார்ப்பது மட்டுமல்ல உண்மையாய்ப் பார்ப்பது. திருட்டாந்தமாய்ப் பாருங் கள்: தங்கள் கடியாரத்தின்மேல் பில்லையில் மணி களைக் குறிக்கும் எண்கள் இருக்கின்றன வல்லவா? அவற்றில் ஆறு ஆங்கில எண்ணு சுதேசபாஷை யெண்ணு?" என்றார்.

கோர:—இந்தச் சிறுபிள்ளை விளையாட்டுக்கெல்லாம் நான் இடந்தரமாட்டேன்.

அச்சு:—அப்படியல்ல. இது நல்ல ஆராய்ச்சி யென்றே தெரி கிறது. எது என்றுதான் கூறுமே பார்ப்போம்.

கோர:—ஆங்கில எண்தான்.

திரு:—தயவு செய்து அந்த எண் தலையை கடியாரத்தின்

கீழ்ப்பக்கத்தில் வைத்துக்கொண் டிருக்கிறதா மேல் பக்கம் வைத்துக்கொண் டிருக்கிறதா ?

கோரனர் சற்று நேரம் சிந்தித்து, "பனிரண்டு என்ற எண் மேல்பக்கமிருப்பதால் ஆறு தலைகீழாகத்தா னிருக்கிறது" என்றார்.

திரு:—தயவுசெய்து நிச்சயமாய்க்கூறும். நன்றாய்ச் சிந்தித்து ஒரேதிட்டமாய்க் கூறுங்கள். நன்றாய்ப் பார்த்திருக்கிறீர்களா என்பதைக் கவனித்துக் கூறுங்கள்.

கோர:—ஒன்றும் சிந்திக்கவேண்டியதில்லை. நான் கூறியபடியேதான் இருக்கிறது.

திரு:—ஆறு என்ற எண் தலைகீழாகத் தங்கள் கடியாரத்தின் தகட்டிலிருக்கிறது உண்மைதானே ?

கோரனர் ஆத்திரத்தோடு, "சிறுவனே! இன்னும் எத்தனை முறை கேட்பாய். கட்டாயம் அப்படியே யிருக்கிறது" என்றார்.

திருவேங்கிடம், "தயவுசெய்து தங்கள் கடியாரத்தை யெடுத்துக் கொடுங்கள்" என்றான். கோரனர் எடுத்துத் திறக்காமலே அவனிடமளித்தார். சிறுவன் அதைத்திறந்து பார்த்ததும் மறுபடி மூடிவிட்டு அச்சுதம் பிள்ளையிடம் அளித்தான்.

அச்சுதம்பிள்ளை யதைக் கோரனரிடமளித்து "பாரும் நீர் கூறியபடி இருக்கிறதா? குற்றத்தை யொப்புக்கொள்ளும்" என்றார்.

கோரனர் அதை வாங்கிப் பார்த்ததும் முகவாட்டமடைந்து "இது இயற்கையாய் நேரிடுகிற குற்றமே. நம்மிடம் எப்போதும் இருக்கும் வஸ்துவை நாம் நன்றாகக் கவனிப்பதில்லை" என்றார். துப்பறியும் கிருஷ்டப்பன் சட்டென்று பாய்ந்துபோய் கடியாரத்தை வாங்கிப் பார்த்து "என் ? இதில் ஆறு என்ற எண்ணேயில்லை. அது இருக்குமிடத்

தில் ஒரு வட்டமான கோடும் விநாடி காட்டும் முள்ளுமே யிருக்கின்றன" என்றான்.

யாவரும் கலகலவென்று நகைத்துவிட்டார்கள். கோரனர் "இந்த விகட விளையாட்டு நிற்கட்டும்" என்றார். அச்சுதம்பிள்ளை "அய்யா கோரனரவாள்! சற்று பொறும். ஒரு கோரனர் இப்படி நடந்துகொள்வது அழகல்ல. தாங்கள் இக்கடியாரத்தைப் பல வருடங்களாகப் பார்த்திருந்தும் அதில் ஆறு என்ற எண் இல்லை யென்பதை யறிந்து கொள்ளவில்லை யல்லவா?" என்றார்.

கோர:—நான் கவனித்துப் பார்த்திருக்கவில்லை.

அச்சு:—"அது சரிதான். இதனால் என்ன ஏற்படுகிறது? நம்பத்தக்க மனிதன் தான் கூறுவது உண்மையென்று நம்பிக் கூறினாலும், அச்சாக்ஷியத்தை நம்பலாம் என்பதற்கில்லை. அது பொய்யாய் விட்டாலும் ஆய்விடுமென்று தெரிகிறது" என்று கூறிவிட்டுச் சிறுவனை நோக்கி, "திருவேங்கடம்! கோரனருடைய கடியாரத்தில் ஆறு என்ற எண் இருக்கவேண்டிய விடத்தில் விநாடி முள் இருப்பது உனக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

திருவேங்கடம் "எனக்கு அது தெரியாது. இவர் அதைக் கவனித்தாரோ என்பதை யறியவேண்டுமென்று எண்ணியே யப்படிச் செய்தேன். அப்படி யிருந்தால் தலை கீழாகவே யிருக்கும். அனேகம் கடியாரங்களில் அந்த விடத்தில் விநாடி முள் இருப்பதுண்டு. அதைப்பற்றி நான் புத்தகத்தில் வாசித்தேன். ஜனங்கள் உண்மையை யுற்றுக் கவனிப்பதில்லை" என்றான்.

அச்சுதம்பிள்ளை அவனை வியப்போடு நோக்கி, "கூரிய புத்தியுடையவன். பிரசித்தி யடையவேண்டும்" என்று

தமக்குத்தாமே கூறிக்கொண்டு மறுபடி கோனரை நோக்கினார்.

சிலர் தங்களுக்குக் கோபமூட்டியவனை விட்டுவிட்டு வேறு யார்மேலேனும் தம் கோபத்தைக் காட்டுவது வழக்கம். கோனர் அத்தகையோரைச் சேர்ந்தவரே. அவர் "இப்போது சந்தானத்தையும் அவன் சாட்சியத்தையும் விட்டுவிட்டு விவகாரத்தைத் தொடங்குவோம்" என்று கூறி விட்டு இலக்ஷ்மணனை நோக்கி,

"இலக்ஷ்மணன்! உன் சிறிய தந்தையின் மரணசாசனத்தில் உனக்கும் பொருள் வைத்திருப்பார் என்று நீ எதிர் பார்த்தாயோ?" என்றார்.

இலக்ஷ்மணன் கண்கள் சிவந்தன. அவன், "நீர் என்ன எண்ணிக்கொண் டிருக்கிறீரோ எனக்கு விளங்கவில்லை. உமது ஆலோசனையைச் சிறந்ததாகவும் நான் மதிக்கவில்லை. அவர் எனக்கு தம் மரணசாசனத்தில் பணம் வைத்ததும் வைக்காததும் எனக்குத் தெரியாது. அவரே நேற்று என்னிடம் தமது மரணசாசனத்தில் எனக்கு ஐம்பதினாயிரம் டாலர் வைத்திருப்பதாகக் கூறினார். அவர் வைத்திருக்கிறாரோ இல்லையோ எனக்குத் தெரியாது" என்றான். அவன் இதுகாறும் பேசியதுபோல் அதுவும் அலட்சியமான பேச்சாகவே யிருந்தது. தன் வார்த்தைகளால் என்ன அபிப்பிராயம் உண்டாகும் என்பதைப்பற்றிச் சற்றும் சட்டை செய்யாதவன் போல் அவன் நடந்து கொண்டான்.

கோனர் அச்சுதம்பிள்ளையை நோக்கி, "இரத்தின சாமிப்பிள்ளையின் மரணசாசனத்தில் இருக்கும் விஷயம் உமக்குத் தெரியுமோ?" என்றார்.

அச்சு:—ஆகா தெரியும், என்றான் அதை எழுதியவன்.

கோர:—அதில் இலக்ஷ்மணன் பிள்ளைக்கும் பொருள் வைக்கப்பட் டிருக்கிறதோ?

186570

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி * * * * மாதவன்

அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக் கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது, இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 1—12—0. தனித்தனி வாங்குபவருக்கு ஒவ்வொரு பாக மும் விலை ரூ. 1.

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக்கூடிய வையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவையு னான சம்பங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கை களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட் டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட் டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக் கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் விருக்கின்றன வென்று மட்டும் கூறுகி றோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 2—4—0

அர்ஜுனஸிங், சுந்தர் „ 0 2 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000·இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொருவருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

**விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

---

**Printed at the " Ananda Bodhini " Press, Madras.**